وَاعْتَصِمُوْا بِحَبْلِ اللّٰهِ جَمِيْعًا وَّلَا تَفَرَّقُوْا

(*ஆல இம்ரான் : 104)*

# கிலாஃபத்தின் மகத்தான அந்தஸ்தும் தகுதியும் அதன் அருள்களும், காலத்தின் கலீஃபாவின் மீது கொள்ள வேண்டிய அன்பும் கட்டுப்படுதலும், நமது பொறுப்புகளும்

தமிழாக்கம்: மவ்லவி முஸ்ஸம்மில் அஹ்மது H.A

வெளியிடுவோர்:
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
காதியான்

Tamil Translation of the Urdu Book
Khilafat ka Azimush Shan Maqam-o-martaba,
is ki barakat, khalifa-e-waqt ki
mahabbat-o-ita'at aur hamari zimmadarian
கிலாஃபத்தின் மகத்தான அந்தஸ்தும் தகுதியும்
அதன் அருள்களும், காலத்தின் கலீஃபாவின்
மீது கொள்ள வேண்டிய அன்பும்
கட்டுப்படுதலும், நமது பொறுப்புகளும்

**Compiled by : Moulavi Aftab Ahmad Nayyar &**
**Moulavi Muhamad Aarif Rabbani**

**First edition : 2019**

**Copies : 1000**

**Translated by : Moulavi O.M.Muzzammil Ahmad H.A**

**Publisher : Nazarat Nashr-o-Isha'at,**
**Qadian, Gurdaspur Distt - 143516,**
**Punjab - India**

**Printed at : Fazl-e-Umar Printing Press**
**Qadian-143 516**

**National Toll free No: 1800 103 2131**
**Tamil Toll Free No: 1800 425 40000**

# முன்னுரை

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் இமாம் மஹ்தி அவர்களுக்குப் பிறகு **108** ஆண்டுகளாக கிலாஃபத்தின் அருளுக்குரிய அமைப்பு தொடர்வது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தனிச் சிறப்பாகும். இது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் மகத்தான அருளாகும். இன்று உலகம் இந்த அருளிலிருந்து இழப்பிற்குரியதாக இருக்கிறது. கிலாஃபத்தை சுயமாக நிலைநாட்டுவதற்கு எவ்வளவோ முயற்சி செய்யப்படுகிறது. ஆனால் இறைவனே கிலாஃபத்தின் இந்த அமைப்பை உருவாக்காத வரை ஆயிரக்கணக்கான உலக முயற்சிகளினால் ஒருபோதும் இதை உருவாக்கி விட முடியாது.

அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நற்பேறு பெற்ற ஜமாஅத் ஆகும். இதில் அல்லாஹ் கிலாஃபத் எனும் இந்த அருளுக்குரிய அமைப்பை நிலைநாட்டியுள்ளான். அதன் மூலமாக உலகம் முழுவதும் ஜமாஅத்தின் கல்வி, மார்க்க ஒழுக்கப் பயிற்சி மட்டுமின்றி, மார்க்க நூல்களை வெளியிடுதல், நேர்வழியை பரப்புதல் ஆகிய பணிகள் நவீன ஊடகங்கள் மூலமாக மின்னல் வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.

கிலாஃபத்தின் முக்கியத்துவம், அருள்கள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு இது தொடர்பாக ஜமாஅத் சகோதரர்களுக்கு அவர்களின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டுவதற்காக நஸாரத் நஷ்ரோ இஷாஅத்

காதியான் ஹுஸூர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட **2015** - ஆம் ஆண்டின் மஜ்லிஸே ஷூராவின் ஆலோசனையின்படி கிலாஃபத்தின் மகத்தான அந்தஸ்து, தகுதி, அதன் அருள்கள், காலத்தின் கலீஃபா மீது கொள்ளும் அன்பு, கட்டுப்படுதல் மற்றும் நமது பொறுப்புகள் என்ற தலைப்பில் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த நூலிலுள்ள கருத்துக்களை ஒருங்கிணைப்பதில் மவ்லவி சய்யிது ஆஃப்தாப் அஹ்மது சாஹிப் நய்யர் மற்றும் மவ்லவி முஹம்மது ஆரிஃப் ரப்பானி சாஹிப் ஆகிய இரு கொள்கை பரப்புநர்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். அல்லாஹ் அவ்விருவருக்கும் மேலான நற்கூலியை வழங்குவானாக. ஹுஸூர் அவர்களின் ஒப்புதலுடன் இந்த நூல் வெளியிடப்படுகிறது. அல்லாஹ் இந்த நூலை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. ஆமீன்.

**நாஸிர் நஷ்ரோ இஷாஅத்**
**காதியான்**

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# அறிமுகம்

அல்லாஹ் மனிதனுடைய பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நபிமார்களை அனுப்புகின்ற தொடரை துவக்கினான். ஒவ்வொரு காலத்திலும் அல்லாஹ்வின் தூதர்கள் தோன்றினார்கள். அவர்கள் அல்லாஹ்வின் கலீஃபாக்கள் (பிரதிநிதிகள்) என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் மனிதர்களை நேர்வழியில் கொண்டு வருவதற்கு முழு முயற்சி செய்தனர். அல்லாஹ்வின் இத்தூதர்கள் ஒரு நீண்ட முயற்சிகளுக்குப் பிறகு ஓர் இறை ஜமாஅத்தை உருவாக்கி விட்டு மனிதத்துவத்தின் தேட்டத்திற்கேற்ப அழிந்து போகும் இந்த உலகிற்கு மற்ற மனிதர்களைப் போன்றே விடை கொடுத்து விட்டு தமது உண்மையான எஜமானனிடம் சென்று விட்டனர். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

நபிமார்களின் மரணத்தின்போது அவர்களை பின்பற்றும் ஜமாஅத் உயிருடன் இருக்கும்போதே மரணித்தது போல் ஆகிவிடுகிறது. அவர்கள் நிலைகுலைந்து போய்விடுகின்றார்கள். அவர்களின் வெளிப்படையான பதற்றமான இந்த நிலையைக் கண்டு எதிரிகள் மகிழ்ச்சி கொண்டாடுகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு மத்தியில் அல்லாஹ் அந்த ஜமாஅத்தை ஆதரவின்றி விட்டுவிடுவதில்லை. மாறாக, அந்த ஜமாஅத்தை கவனத்தில் கொண்டவாறு, காலம் சென்றவருக்கு பிரதிநிதியாக ஒருவரை நியமிக்கின்றான்.

அவர் நிலைகுலைந்திருக்கும் ஜமாஅத்தை பாதுகாத்துக் கொள்கிறார். பிறகு படிப்படியாக அந்த ஜமாஅத் தனது பணிகளையும் கொள்கைகளையும் முழுமை செய்வதற்கான தகுதியைப் பெற்று விடுகிறது. இதற்கேற்ப அல்லாஹ்வின் இந்த நடைமுறை நமது நபி கரீம் (ஸல்) அவர்களுடனும் நடந்தது. அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களை தேர்ந்தெடுத்து கிலாஃபத்தே ராஷிதாவை நிலைநாட்டினான். இந்த கிலாஃபத்தே ராஷிதா **30** ஆண்டு காலம் நிலைபெற்றது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப கிலாஃபத்தே ராஷிதாவின் இந்தத் தொடர் இறுதி காலம் வரை நிலை பெற இயலவில்லை. அல்லாஹ், அவனது தூதரின் முன்னறிவிப்புகள் மற்றும் வாக்குறுதிக்கேற்ப கிலாஃபத்தே ராஷிதாவின் தொடர் இறுதி காலத்தில் நுபுவ்வத் வழியில் மீண்டும் நிலைபெறவிருந்தது. இதன் அழகிய விளக்கம் சூரா ஜுமுஆவில் இடம்பெறுள்ளது.

هُوَالَّذِیۡ بَعَثَ فِی الۡاُمِّیّٖنَ رَسُوۡلًا مِّنۡہُمۡ یَتۡلُوۡا عَلَیۡہِمۡ اٰیٰتِہٖ وَ یُزَکِّیۡہِمۡ وَ یُعَلِّمُہُمُ الۡکِتٰبَ وَالۡحِکۡمَۃَ ٭ وَاِنۡ کَانُوۡا مِنۡ قَبۡلُ لَفِیۡ ضَلٰلٍ مُّبِیۡنٍ ۔ وَّاٰخَرِیۡنَ مِنۡہُمۡ لَمَّا یَلۡحَقُوۡا بِہِمۡ

இதன் கருத்து மொழியாக்கம் இதுவாகும்:

அல்லாஹ் அரபிகளிடத்தில் அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பினான். அவர் அவர்களுக்கு இறைவனது வசனங்களை ஓதிக் காண்பிக்கின்றார். அவர்களை தூய்மைப்படுத்துகின்றார். வேதத்தின், ஞானத்தின் விஷயங்களை கற்றுக் கொடுக்கின்றார்.

அதற்கு முன் அவர்கள் மிகத் தெளிவான வழிகேட்டில் இருந்தனர். இன்னொரு ஜமாஅத்தையும் அவன் அவர்களுடனேயே இணைத்துள்ளான். அவர்களுக்கு நமது தூதர் (தமது நிழல் மற்றும் பிரதி பிம்பத்தில் வரும் ஒருவர் மூலமாக) தர்பிய்யத் வழங்குவார். ஆனால் இந்த ஜமாஅத் இன்னும் உலகில் தோன்றி சஹாபாக்களின் ஜமாஅத்துடன் இணையவில்லை. ஆயினும் இனி வரும் காலத்தில் கண்டிப்பாக தோன்றும். (**62: 3, 4** காண்க)

எவர்களுக்கு மத்தியில் உங்களின் இரண்டாவது (நிழலான, பிரதி பிம்பமான) தோற்றம் நிகழவிருக்கிறதோ அவர்கள் யார்? என ஒரு நபித்தோழர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார். ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் அங்கே இருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருடைய தோளில் கை வைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

لَوْ كَانَ الْإِيْمَانُ عِنْدَ الثُّرَيَّا لَنَالَهُ رَجُلٌ مِّنْ هٰؤُلَاءِ

லவ் கானல் ஈமானு இந்தஸ் சுரய்யா லனா லஹூ ராஜுலும் மின் ஹாவுலாயி.

(புகாரி கிதாபுத் தஃப்ஸீர். பாபு தஃப்ஸீர் சூரா ஜுமுஆ)

அதாவது ஒரு காலத்தில் ஈமான் உலகிலிருந்து மறைந்து கார்த்திகை நட்சத்திரம் வரை சென்றடைந்து விட்டாலும் இந்த பாரசீக வம்சத்திலிருந்து ஒருவர் அதை மீண்டும் பூமிக்குக் கொண்டு வருவார்.

மேலும் இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

سَلْمَانُ مِنَّا اَهْلَ الْبَيْتِ

சல்மானு மின்னா அஹ்லல் பைத்.
(தப்ரானீ கபீர், முஸ்தத்ரக் ஹாக்கிம். ஜாமிவுஸ் ஸகீர் எடுத்தெழுதிய சான்றில்)

பொருள்: பாரசீகத்தைச் சேர்ந்த ஸல்மான் நம்மைச் சேர்ந்தவர். அதாவது அஹ்லே பைத்தைச் சேர்ந்தவர்.

வரக் கூடிய மஸீஹ், மஹ்தி பாரசீகத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டியிருந்தது என்பது இந்த ஹதீஸில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் மஹ்தியைப் பற்றி அவர் அஹ்லே பைத்தைச் சேர்ந்தவராக இருப்பார் என்ற இரண்டாவது முன்னறிவிப்பும் நிறைவேறி விட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி காலத்தில் பாரசீக வம்சத்திலிருந்து தனது நிழலாகத் தோன்றும் ஒருவரைப் பற்றி முன்னறிவித்திருந்தார்கள். அதற்கு மேற்கொண்டு அதிகமான விளக்கத்தை சில ஹதீஸுகளில் எடுத்துக் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

كَيْفَ اَنْتُمْ اِذَا نَزَلَ ابْنُ مَرْيَمَ فِيْكُمْ وَاِمَامُكُمْ مِنْكُمْ

கய்ஃப அன்த்தும் இஸா நஸலப்னு மர்யம ஃபீக்கும் வ இமாமுக்கும் மின்கும்.
(சஹீஹ் புகாரி - ஹதீஸுல் அன்பியா. பாடம் நூஸூலு ஈசப்னி மர்யம்)

பொருள்: இப்னு மர்யம் உங்களிலிருந்து தோன்றி உங்களுக்கு இமாமாக இருக்கும்போது உங்களின் நிலை எவ்வாறு இருக்கும்?

இன்னொரு ஹதீஸில் வரவிருக்கும் இந்த மஸீஹ்தான் மஹ்தியாகவும் இருப்பார் என்ற

உண்மையையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். அதாவது மஸீஹ், மஹ்தி ஆகிய இருவரும் ஒரே நபரைக் குறிக்கும் இரு வேறு பெயர்களாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

وَلَا الْمَهْدِيُّ اِلَّا عِيْسَى ابْنَ مَرْيَمَ

வ லல் மஹ்திய்யு இல்லா ஈஸப்ன மர்யம.

(இப்னு மாஜா. பாபு ஷித்ததுஸ் ஸமான். பக்கம் **257**. எகிப்து வெளியீடு. கன்ஸுல் உம்மால் தொகுதி **7** பக்கம் **156**)

அதாவது ஈஸப்னு மர்யமைத் தவிர வேறு எந்த மஹ்தியும் இல்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரவிருக்கும் அந்த இமாமின் காலம் குறித்தும் கூறியிருக்கிறார்கள். அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

اِذَا مَضَتْ اَلْفٌ وَّمِأَتَانِ وَاَرْبَعُوْنَ سَنَةً يَّبْعَثُ اللّٰهُ الْمَهْدِيَّ

இஸா மழத் அல்ஃபுன்வ் வ மிஅதானி வ அர்பவூன சனத்தன் யப்அஸுல்லாஹுல் மஹ்திய்ய.

(அன்னஜ்முஸ் ஸாக்கிப் தொகுதி **2** பக்கம் **209**)

அதாவது **1240** ஆண்டுகள் கடந்து விட்டால் அல்லாஹ் மஹ்தியை அனுப்புவான்.

மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியின் அந்தஸ்து பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

لَيْسَ بَيْنِيْ وَبَيْنَهٗ نَبِيٌّ يَعْنِيْ عِيْسٰى وَاِنَّهٗ نَازِلٌ فَاِذَا رَاَيْتُمُوْهُ فَاعْرِفُوْهُ

லைஸ பைனீ வ பைனஹூ நபிய்யுன். யஃனீ ஈஸா

வ இன்னஹு நாஸிலுன். ஃபஇஸா ரஅய்த்துமூஹு ஃபஃரிஃபூஹு.

(அபூதாவூது. கிதாபுல் மலாஹிம். பாபு குரூஜுத் தஜ்ஜால்)

''வரவிருக்கும் மஸீஹுக்கும் எனக்கும் இடையில் எந்த நபியுமில்லை. மேலும் மஸீஹ் கண்டிப்பாக உங்கள் மத்தியில் இறங்குவார். எனவே நீங்கள் அவர் வரும்போது அவரைப் பார்த்தவுடன் அவரை அடையாளங்கண்டு கொள்ளுங்கள்.''

சஹீஹ் முஸ்லிமின் ஒரு ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரக் கூடிய மஸீஹை ஒரே சொற்றொடரில் மீண்டும் மீண்டும் 'அல்லாஹ்வின் நபி' என்று குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

وَ يُحْصَرُ نَبِيُّ اللهِ عِيْسىٰ وَاَصْحَابُهٗ...فَيَرْغَبُ نَبِيُّ اللهِ عِيْسىٰ وَاَصْحَابُهٗ...ثُمَّ يَهْبِطُ نَبِيُّ اللهِ عِيْسىٰ وَاَصْحَابُهٗ...فَيَرْغَبُ نَبِيُّ اللهِ عِيْسىٰ وَاَصْحَابُهٗ اِلَى اللهِ...الخ

வ யுஹ்ஸரு நபிய்யுல்லாஹி ஈஸா வ அஸ்ஹாபுஹு..........ஃபயர்கபு நபிய்யுல்லாஹி ஈஸா வ அஸ்ஹாபுஹு........ஸும்ம யஹ்பி(த்)து நபிய்யுல்லாஹி ஈஸா வ அஸ்ஹாபுஹு............ஃபயர்கபு நபிய்யுல்லாஹி ஈஸா வ அஸ்ஹாபுஹு இலல்லாஹி.

(முஸ்லிம். பாபு திக்ருத் தஜ்ஜால்)

அதாவது, யஃஜுஜும், மஃஜுஜும் மேலோங்கியிருக்கும் காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றும்போது அல்லாஹ்வின் நபியாகிய ஈஸா மற்றும் அவருடைய சஹாபிகள் எதிரிகளால் முற்றுகையிடப்படுவார்கள்........பிறகு அல்லாஹ்வின்

நபியாகிய ஈஸா மற்றும் அவருடைய சஹாபிகள் துஆவுடனும் மன்றாடலுடனும் திரும்புவார்கள்; அல்லாஹ்வின் பக்கம் திரும்புவார்கள்........மேலும் அந்த துஆவின் விளைவாக அல்லாஹ்வின் நபியாகிய ஈஸாவும் அவருடைய சஹாபிகளும் கஷ்டங்களின் சுழற்சியிலிருந்து ஈடேற்றம் பெற்று எதிரிகளின் கூடாரத்திற்குள் நுழைந்து விடுவார்கள். ஆனால் அங்கு புது வித கஷ்டங்கள் ஏற்படும்...........பிறகு அல்லாஹ்வின் நபியாகிய ஈஸாவும் அவருடைய சஹாபிகளும் மீண்டும் துஆ செய்தவாறு இறைவன் பக்கம் குனிவார்கள். மேலும் அல்லாஹ் அவர்களின் கஷ்டங்களை நீக்கி விடுவான்.

இந்த ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரே சொற்றொடரில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பற்றி **4** முறை நபியுல்லாஹ் (அல்லாஹ்வின் நபி) என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள முன்னறிவிப்புகளிலிருந்து இறுதி காலத்தில் **13** - ஆம் நூற்றாண்டின் இறுதியில் மஸீஹ், மஹ்தியின் தோற்றம் நிகழும்; அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பிம்பமாகவும், நிழலாகவும் இருப்பார். மேலும் இறைவன் அவருக்கு நுபுவ்வத்தின் அந்தஸ்தை வழங்குவான் என்பது தெளிவாகிறது. இந்த முன்னறிவிப்புகளுக்கேற்ப ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் சரியாக **13** - ஆம் நூற்றாண்டின் இறுதியில் மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற வாதத்தை செய்தார்கள். அல்லாஹ் இல்ஹாம் மூலமாக அவர்களை நோக்கி இவ்வாறு கூறினான்:

جَعَلْنَاكَ الْمَسِيْحَ ابْنَ مَرْيَمَ

ஜஅல்னாக்கல் மஸீஹப்ன மர்யம

அதாவது நாம் உம்மை மஸீஹிப்னு மர்யமாக ஆக்கியுள்ளோம். (இஸாலயே அவ்ஹாம் பக்கம் **632**)

அவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றியதால், அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடந்ததால் முன்னறிவிப்புகளுக்கேற்ப அல்லாஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு உம்மத்தி நபிக்கான அந்தஸ்தை வழங்கினான். அவர்கள் இந்த அந்தஸ்து பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்:

''நுபுவ்வத் நமது நபி (ஸல்) அவர்களுடன் முடிந்து விட்டது. திருக்குர்ஆனைத் தவிர (நமக்கு) வேறு எந்த வேதமும் இல்லை. அது முந்தைய எல்லா வேதங்களையும் விட சிறந்ததாகும். மேலும் முஹம்மதிய ஷரீஅத்தைத் தவிர (நமக்கு) வேறு எந்த ஷரீஅத்தும் இல்லை. ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவினால் எனக்கு நபி என பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் இது அன்னாரை முழுமையாகப் பின்பற்றுவதால் கிடைத்த அருள்களில் நிழலாகும். நான் என்னிடம் எந்த சிறப்பையும் காணவில்லை. மேலும் நான் பெற்றதெல்லாம் அந்த தூயவரிடமிருந்தே பெற்றுள்ளேன். மேலும் அல்லாஹ்வின் பார்வையில் எனது நுபுவ்வத்தின் அந்தஸ்து, அதிகமாக இறைவனுடன் உரையாடுவது மட்டுமேயாகும். மேலும் எவர் இதை விட அதிகமாக வாதம் செய்வாரோ அல்லது தனது நஃப்ஸுக்கு முக்கியத்துவம் கொடுப்பாரோ அல்லது தனது கழுத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஊற்றிலிருந்து திருப்பிக் கொள்வாரோ அவர் மீது அல்லாஹ்வின் சாபம்

இறங்குகிறது. மேலும் நமது ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள். அவர்களுடன் இறைதூதர்களின் தொடர் முடிந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தன்னிச்சையாக நுபுவ்வத்திற்கான வாதம் செய்வது எவருக்கும் ஆகுமானதன்று. இப்போது அதிகமாக இறைவனிடமிருந்து வெளிப்பாட்டைப் பெறுவது மட்டுமே எஞ்சியிருக்கிறது. அதுவும் நபி (ஸல்) அவர்களை பின்பற்றுதல் என்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருக்கிறது. அது இல்லாமல் முடியாது. **அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு இந்த அந்தஸ்து முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய ஒளிகளின் சுடர்களைப் பின்பற்றியதாலேயே கிடைத்தது.** மேலும் அல்லாஹ் எனக்கு உவமையான முறையில் நபி என பெயர் வைத்துள்ளான்; உண்மையான முறையில் அல்ல. எனவே இங்கு அல்லாஹ்வின் தன்மானம் அல்லது ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் தன்மானம் பொங்கி எழ வேண்டிய எந்த சந்தர்ப்பமும் இல்லை. ஏனெனில் எனது தர்பிய்யத் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் பாதுகாப்பின் கீழ் ஏற்பட்டிருக்கிறது. மேலும் எனது பாதங்கள் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் காலடிகளை பின்தொடர்கிறது. நான் எந்த விஷயத்தையும் என் சார்பாக கூறவில்லை. மாறாக, அல்லாஹ் எனக்கு வஹீ அறிவித்ததை நான் பின்பற்றியிருக்கிறேன். இதற்குப் பிறகு நான் படைப்பினங்களின் மிரட்டல்களுக்கு அஞ்சுவதில்லை.''(அல் இஸ்திஃப்தா என்ற அரபி நூலிலிருந்து மொழியாக்கம். ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 688, 689)

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் **1889** - ஆம் ஆண்டு ஒரு தூய ஜமாஅத்தை உருவாக்கினார்கள். அந்த ஜமாஅத்திற்கு **ஜமாஅத்தே அஹ்மதிய்யா முஸ்லிமா** என பெயர் சூட்டினார்கள். அவர்களின் முழு வாழ்வும் இஸ்லாத்தை உலகின் எல்லைகள் வரை மேலோங்கச் செய்வதில் கழிந்தது. அவர்களால் இயற்றப்பட்ட **80** - க்கும் மேற்பட்ட நூல்கள் இதற்கு சாட்சியாகும். இவ்வாறு நம்மவர்களின் சாட்சியும், மற்றவர்களின் சாட்சியும் இருக்கின்றன. அதன் மூலம் அவர்கள் இஸ்லாத்தை வெற்றி பெறச் செய்வதற்காக தமது முழு வாழ்வையும் எவ்வாறு செலவிட்டார்கள் என்பது உலகிற்கு தெரிய வந்தது.

அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப அவர்கள் தமது கடமைகளை அழகிய முறையில் சிறப்பாக நிறைவேற்றினார்கள். இறுதி மூச்சு வரை தனது வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் இந்த இறை பணிக்காகவே அர்ப்பணித்தார்கள். மேலும் அதற்காக ஒரு தூய ஜமாஅத்தை நிறுவினார்கள். அவர்கள் மரணமடைந்தபோது எதிரிகள் இனி இந்த ஜமாஅத்தும் அன்னாரின் குறிக்கோளும் முடிந்து விடும் என நினைத்தனர். ஆனால் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப கிலாஃபத்தின் அமைப்பை உருவாக்கினான். அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

وَعَدَ اللّٰهُ الَّذِیۡنَ اٰمَنُوۡا مِنۡکُمۡ وَ عَمِلُوا الصّٰلِحٰتِ لَیَسۡتَخۡلِفَنَّہُمۡ فِی الۡاَرۡضِ
کَمَا اسۡتَخۡلَفَ الَّذِیۡنَ مِنۡ قَبۡلِہِمۡ وَ لَیُمَکِّنَنَّ لَہُمۡ دِیۡنَہُمُ الَّذِی ارۡتَضٰی لَہُمۡ وَ

لَيُبَدِّلَنَّهُمْ مِّنْ بَعْدِ خَوْفِهِمْ أَمْنًا يَعْبُدُونَنِيْ لَا يُشْرِكُونَ بِيْ شَيْئًا وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَأُولٰئِكَ هُمُ الْفَاسِقُوْنَ

பொருள்: உங்களில் நம்பிக்கை கொண்டு நற்செயல் ஆற்றுபவர்களுக்கு அவர்களுக்கு முன்னிருந்தோரில் கலீஃபாவை உருவாக்கியது போன்று பூமியில் கலீஃபாவை உருவாக்குவதாக அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான். மேலும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களது மார்க்கத்தை உறுதிப்படுத்துவான். அவர்களின் அச்சத்திற்குப் பிறகு அவர்களுக்கு அமைதியை வழங்குவான். அவர்கள் என்னை வணங்குவார்கள்; எனக்கு எதனையும் இணையாக்க மாட்டார்கள். இதற்குப் பிறகும் நிராகரிப்பவர்கள் தீயவர்கள் ஆவர். (திருக்குர்ஆன் **24:56**)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் சஹ்ல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு நுபுவ்வத்துக்குப் பிறகும் கிலாஃபத் இருக்கிறது.

(கன்ஸுல் உம்மால், கிதாபுல் ஃபித்னி மின் கிஸ்மில் அஃப்ஆல். ஃபஸ்லு ஃபீ முதஃபர்ரிகாதில் ஃபித்ன். தொகுதி **11** பக்கம் **115** ஹதீஸ் எண்: **31444**)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

உங்களில் நுபுவ்வத் நிலைபெறும். அதற்குப் பிறகு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் நிலைபெறும். அதற்குப் பிறகு கொடுங்கோல் ஆட்சி இருக்கும். அதற்குப் பிறகு பலவந்தமான ஆட்சி இருக்கும். அதற்குப் பிறகு நுபுவ்வத்

வழியிலான கிலாஃபத் இருக்கும். அதற்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மவுனமாகி விட்டார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல். ஹதீஸ் எண்: **17680**)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்புகளுக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அஹ்மதிய்யா கிலாஃபத்தின் அருளுக்குரிய, நற்பேறு பெற்ற மகத்தான அமைப்பு உருவானது. அதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இரண்டாம் வல்லமை என்ற பெயரால் அழைத்தார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத் பற்றி நற்செய்தி வழங்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

இறைவன் தனது நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் உதவி செய்கிறான். அவர்களுக்கு வெற்றியை வழங்குகிறான். இது இறைவனின் நடைமுறையாகும். அவன் மனிதனை பூமியில் படைத்த நாளிலிருந்து இந்த நடைமுறையை அவன் எப்போதும் வெளிப்படுத்தி வந்திருக்கிறான். உதாரணமாக,

كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِي

கதபல்லாஹு லஅக்லிபன்ன அன வருஸுலீ (நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என இறைவன் எழுதி வைத்துள்ளான். திருக்குர்ஆன் **58:22**) வெற்றி என்பதன் கருத்து, இறைவனின் குறிக்கோள் பூமியில் முழுமையடைந்து விட வேண்டும் என்பது தூதர்களின், நபிமார்களின் விருப்பமாக இருக்கிறது.........

ஆனால் அதை அவர்களின் கையினால் அவன் முழுமைப்படுத்துவதில்லை. மாறாக, வெளிப்படையில் ஒரு தோல்வியின் அச்சத்தை தன்னுடன் கொண்டுள்ள அந்த நேரத்தில் அவர்களுக்கு மரணத்தைக் கொடுத்து எதிரிகளுக்கு எள்ளிநகையாடவும், கேலி கிண்டல் செய்யவும் சந்தர்ப்பம் வழங்கி விடுகிறான். பிறகு தனது வல்லமையின் இன்னொரு கையை காட்டுகிறான். மேலும் எவ்வாறான சில வழிவகைகளை உருவாக்கி விடுகின்றான் என்றால் அவற்றின் மூலம் ஓரளவுக்கு நிறைவு பெறாமல் இருந்த அந்த நோக்கங்கள் தமது முழுமையை அடைந்து விடுகின்றன.

சுருக்கமாக, இரண்டுவிதமான வல்லமைகளை வெளிப்படுத்துகிறான். **(1)** முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் கரத்தை காட்டுகிறான். **(2)** இரண்டாவதாக, நபியின் மரணத்திற்குப் பிறகு கஷ்டங்கள் உருவாகி விடும்போது எதிரிகள் வலுவடைகின்றனர். மேலும் இப்போது இவர்களின் பணி சீர்குலைந்து விட்டது என நினைக்கின்றனர். இனி இந்த ஜமாஅத் அழிந்து விடும் என உறுதி கொண்டு விடுகின்றனர். ஜமாஅத்தின் மக்களும் தடுமாற்றத்திற்குள்ளாகி விடுகின்றனர். அவர்களின் இடுப்புகள் முறிந்து விடுகின்றன. பேறிழந்த பலர் முர்ததின் (அதாவது, மார்க்கத்தை விட்டு விடும்) வழியை மேற்கொள்ள ஆரம்பித்து விடுகின்றனர். அப்போது இறைவன் இரண்டாம் முறையாக தனது வல்லமை மிக்க ஆற்றலை வெளிப்படுத்துகிறான். மேலும் விழும் நிலையில் இருக்கும் ஜமாஅத்தை காப்பாற்றி விடுகிறான். எனவே

இறுதி வரை பொறுமை செய்பவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் நடந்த இறைவனின் அந்த அற்புதத்தைப் பார்க்கிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் அகால மரணமாகக் கருதப்பட்டது. பல அறிவிலிகள் முர்தத் ஆகி விட்டனர் (மார்க்கத்தை விட்டு விட்டனர்). சஹாபா (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) அவர்களும் துக்கத்தால் பைத்தியக்காரர்களைப் போன்று ஆகி விட்டனர். அப்போது இறைவன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நியமித்து மீண்டும் தனது வல்லமைக்கான முன்மாதிரியைக் காட்டினான். மேலும் இஸ்லாத்தை வீழ்ச்சியடையாமல் காப்பாற்றி விட்டான். மேலும்

وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِينَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا

(திருக்குர்ஆன் **24: 56**)

'அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களது மார்க்கத்தை அவர்களுக்காக உறுதிப்படுத்தினான். அவர்களின் அச்சத்திற்குப் பிறகு அவர்களுக்கு நிம்மதியை வழங்குவான்' என்ற வாக்குறுதியை நிறைவேற்றினான்.............எனவே அன்பிற்குரியவர்களே! எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழிப்பதற்காக இறைவன் இரண்டு வல்லமைகளைக் காட்டுவது தொன்றுதொட்டே அல்லாஹ்வின் நடைமுறையாக இருக்கும்போது இறைவன் தனது நடைமுறையை விட்டுவிடுவது இப்போது சாத்தியமில்லை. எனவே நான் உங்களுக்குக் கூறிய இந்த விஷயத்தினால் நீங்கள் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளங்கள் கவலைப்பட வேண்டாம். ஏனெனில் இரண்டாம் வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும்.

அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும்..........

நான் இறைவன் புறமிருந்து ஒரு வல்லமையாக தோன்றியுள்ளேன். நான் இறைவனின் ஆற்றலின் வடிவமாவேன். எனக்குப் பிறகு சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இரண்டாம் வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறைவனின் இரண்டாம் வல்லமையின் எதிர்பார்ப்பில் ஒன்றாக சேர்ந்து துஆ செய்து கொண்டிருங்கள். இரண்டாம் வல்லமை வானத்திலிருந்து இறங்குவதற்காகவும் உங்கள் இறைவன் அப்படிப்பட்ட முழு ஆற்றல் கொண்ட இறைவன் ஆவான் என உங்களுக்கு அவன் காட்டுவதற்காவும் நல்லவர்களைக் கொண்ட ஒவ்வொரு ஜமாஅத்தும் ஒவ்வொரு நாட்டிலும் ஒன்று சேர்ந்து துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும்........'' (அல்வஸிய்யத். ரூஹானி கஸாயின் தொகுதி **20** பக்கம் **304 - 306**)

இதை சான்றாக வைத்து **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள்** இவ்வாறு கூறுகிறார்கள்:

''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு கிலாஃபத்தின் தொடர் நிலைநாட்டப்பட்டது போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு அதே மாதிரியான கிலாஃபத்தின் தொடர் நிலைநாட்டப்படும் என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துகளிலிருந்து நிரூபணமாகின்றது.''

(கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத் தொகுதி **3** பக்கம் **601**)

இதற்கேற்ப மே **1908** - ஆம் ஆண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஹாஃபிஸ் ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் முதல் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். **1914** - ஆம் ஆண்டு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் இரண்டாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஹாஃபிஸ் மிர்ஸா நாஸிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் மூன்றாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களின் மரணத்திற்குப் பிறகு **1982** - ஆம் ஆண்டு ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) நான்காவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். **2003**-ஆம் ஆண்டு அவர்களின் மரணத்திற்குப் பிறகு தற்போதைய நமது இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களின் தலைமையில் அஹ்மதிய்யா ஜமாஅத் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது.

நமது அன்பிற்குரிய இமாம் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு அல்லாஹ் நற்சுகத்துடன் கூடிய நீண்ட ஆயுளை வழங்குவானாக. அவர்களின் கருணையின் நிழல்

எப்போதும் நம்மீது இருக்கட்டுமாக. அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்திற்கு வெற்றி கிடைக்கட்டுமாக. ஆமீன்.

இந்த ஜமாஅத் வளர்ந்து கொண்டே செல்லும். இந்த இரண்டாம் வல்லமையின் மகத்தான காட்சி அல்லாஹ்வின் நாட்டத்திற்கேற்ப எப்போதும் நிலைபெற்றிருக்கும். ஏனெனில் நமது இறைவனிடம் இரண்டாம் வல்லமை, மூன்றாம் வல்லமை, நான்காம் வல்லமை, ஐந்தாம் வல்லமை ஆகியவை இருக்கின்றன.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்:**

நான் செல்கின்றேன். ஆனால் இறைவன் உங்களுக்காக இரண்டாம் வல்லமையை அனுப்புவான் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதை நான் அறிவேன். ஆனால் நமது இறைவனிடம் இரண்டாம் வல்லமை மட்டுமல்ல, மூன்றாம் வல்லமையும் இருக்கிறது. அவனிடம் நான்காவது வல்லமையும் இருக்கிறது. முதல் வல்லமைக்குப் பிறகு இரண்டாம் வல்லமை வெளிப்பட்டது. இரண்டாம் வல்லமைக்குப் பிறகு மூன்றாம் வல்லமை வெளிப்படும். மூன்றாம் வல்லமைக்குப் பிறகு நான்காம் வல்லமை வெளிப்படும். நான்காம் வல்லமைக்குப் பிறகு ஐந்தாம் வல்லமை வெளிப்படும். **ஐந்தாம் வல்லமைக்குப் பிறகு ஆறாம் வல்லமை வெளிப்படும். இறைவனின் கை மக்களுக்கு அற்புதங்களைக் காட்டிக் கொண்டே செல்லும்.** எந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை முதல்

அடிக்கல்லாக ஆக்கினானோ மேலும் என்னை அவன் இரண்டாவது கல்லாக ஆக்கினானோ அந்த இறை திட்டம் மற்றும் நோக்கத்தின் வழியில் உலகின் பெரும் பெரும் ஆற்றலும், பெரும் சக்திவாய்ந்த மன்னரும் கூட குறுக்கே நிற்க முடியாது. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்: மார்க்கம் அபாயத்தில் இருக்கும்போது அல்லாஹ் அதைப் பாதுகாப்பதற்காக பாரசீக வம்சத்திலிருந்து சிலரை எழுப்புவான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் அவர்களில் ஒருவர் ஆவார்கள். மேலும் இன்னொருவர் நான் ஆவேன். ஆனால் ரிஜாலுன் (சிலரை எழுப்புவான்) என்பதிலிருந்து இஸ்லாமிய மார்க்கத்தின் மகத்துவத்தை நிலைநாட்டவும் அதன் அடித்தளங்களை உறுதிப்படுத்துவதற்காகவும் இன்னும் சிலர் இருப்பதும் சாத்தியமாகும்.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் **23,** மே **2014** முதல் **29** மே **2014** வரை)

இரண்டாம் வல்லமையின் இப்போதுள்ள தலைமையில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் முன்னேற்றத்தின் படித்தரங்களை மிக விரைவாக கடந்து சென்று கொண்டிருக்கிறது. இன்று உலகில் ஜமாஅத்திற்கு ஒரு தனிச்சிறப்பு இருக்கிறது. இந்த ஜமாஅத் மனிதகுலத்திற்கு தொண்டு செய்தல், இஸ்லாத்தை பரவச் செய்தல், தஃலீம் தர்பிய்யத் ஆகிய களங்களில் முன்னோடியாக இருக்கிறது. **24** மணி நேரம் தொலைக்காட்சி மூலமாகவும், வானொலி, பத்திரிகை, ஊடகங்கள், பிரசுரங்கள் ஆகியவற்றின் மூலமாகவும் இஸ்லாத்தின் உண்மையான தூது உலகின் எல்லைகள்

வரை பரப்பப்படுகின்றன. கல்வி, மருத்துவம் ஆகிய களங்களிலும், குடிநீர் இல்லாத இடங்களில் அதற்கான ஏற்பாடு செய்வதற்கும், மின்சாரம் இல்லாத இடங்களில் அதை அமைத்துக் கொடுப்பதற்கும் ஏழைகளுக்கும் தேவையுடையவர்களுக்கும் உதவி செய்யப்படுகிறது. அவ்வாறே அன்பு, அமைதி, சகோதரத்துவம், நாட்டின் சட்டங்களை மதித்தல் ஆகியவற்றை கடைபிடிப்பதில் சிறந்து விளங்குகிறது. இவ்வாறு இஸ்லாத்தின் உண்மை தோற்றத்தை உலகின் முன் எடுத்து வைப்பதன் காரணமாக இஸ்லாம் அல்லாத உலகிற்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பற்றி அறிமுகம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாமிய நூல்களை வெளியிடுவதில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பங்கு நிகரற்றதாகும். இன்று உலகில் **200** - க்கும் அதிகமான நாடுகளில் இந்த ஜமாஅத் உறுதியாக நிலைபெற்று விட்டது.

கிலாஃபத்தின் அருட்கொடையால் ஜமாஅத்தில் ஒருவருக்கொருவர் ஒற்றுமை, ஒருமைப்பாடு, திட நம்பிக்கை, நற்செயல் எனும் அருள்கள் கிடைக்கப்பெற்று அதை உறுதியான கட்டடமாக ஆக்கியுள்ளது. மேலும் கிலாஃபத் வாக்களிக்கப்பட்ட அருள்களிலிருந்து பெரும் பங்கை வழங்கியிருக்கிறது. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் தலைமையில் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் குரல் உலகின் நாலாப்புறத்திலும் ஒலிக்கின்றது. கூட்டம் கூட்டமாக மக்கள் இஸ்லாத்தில் இணைந்து கொண்டிருக்கின்றனர். அல்லாஹ்வின் உதவி

ஒவ்வொரு நொடிப்பொழுதும் வானத்திலிருந்து இறங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

சுருக்கமாக, கிலாஃபத்தின் காரணமாக அஹ்மதிய்யா ஜமாஅத் அல்லாஹ்வின் எண்ணற்ற அருள்களை ஈர்க்கின்றது. மேலும் இறை ஒளியினால் பயன்பெற்று வருகிறது. கிலாஃபத்தை மறுப்பவர்கள் தோல்விக்கும், இழிவுக்கும், பிரிவினைக்கும் இரையாகியுள்ளனர்.

அஹ்மதிய்யா கிலாஃபத்தின் அருள்களை உலக அருள்களுடன் ஒப்பிடுவது அறிவீனமாகும். ஏனெனில் அல்லாஹ்வின் இந்தக் கயிறு அல்லாஹ்விற்கும் நம்பிக்கை கொண்டோருக்கும் இடையில் பிணைக்கப்பட்டுள்ளது. இந்த ஆன்மீக அமைப்பு நிபந்தனைகளை முழுமை செய்யும் நம்பிக்கைகொண்டவர்களுக்கும், பின்பற்றுகின்றவர்களுக்கும் துணை புரிந்து அவர்களை வளர்ச்சியின் பாதையில் முன்னேறச் செய்து தமது வாழ்வின் நோக்கத்தை முழுமை செய்யும் முயற்சிக்கு வழிகாட்டுகிறது. இதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு சாட்சியாகும். மார்க்கத்திற்கு உறுதித்தன்மை கிடைத்துக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் நம்பிக்கை கொண்டவர்களுடைய அச்சத்தின் நிலையை அமைதியின் நிலையாக உடனே மாற்றி விடுகிறது. தவ்ஹீதின் கொடி உயரமாக பறப்பதையும் சிலைகள் குழியில் வீழ்வதையும் காண்கிறோம். நுபுவ்வத்தின் பணிகள் சீராக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த அருட்கொடைக்கு நாம் அல்லாஹ்வுக்கு எந்த அளவுக்கு நன்றி கூறினாலும் அது

குறைவானதேயாகும். இது தொடர்பாக நமது முதன்மையான பொறுப்பு, நாம் அல்லாஹ்வின் இந்த அருட்கொடையின் முக்கியத்துவம் பற்றி சரியான புரிதலையும், ஞானத்தையும் உருவாக்க வேண்டும். மேலும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அதற்கு மதிப்பளிக்க வேண்டும். கிலாஃபத்துக்குக் கட்டுப்படுவதை கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும்.

அஹ்மதிய்யா கிலாஃபத்தின் அருள் தொடர்கிறது. ஆனால் நாம் இதிலிருந்து பயன் பெறுவதற்கு இந்த வானத்தின் அமைப்பை புரிய வேண்டியதும் இதன் அந்தஸ்தையும் தகுதியையும் அறிய வேண்டியதும் அவசியமாகும். எந்த உலக உறவுகளிலும் கிடைக்காத கலப்பற்றதும், நன்றியுணர்வும், அன்பும் கொண்ட ஒரு தொடர்பை அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உருவாக்குங்கள். இந்த நிபந்தனைகளை நாம் கவனத்திற் கொண்டால் நாம் மட்டும் இதிலிருந்து பயன் பெறுபவர்களாக இருக்க மாட்டோம்; மாறாக, நமது சந்ததிகளும், சந்ததிகளின் சந்ததிகளும் இதிலிருந்து பயன் பெற்றுக் கொண்டே செல்லும்.

## கிலாஃபத்தின் மகத்தான அந்தஸ்தும் தகுதியும்

அஹ்மதிய்யா கிலாஃபத் எல்லையற்ற முக்கியத்துவத்தைக் கொண்டதாகும். நபியின் மரணத்திற்குப் பிறகு அவருடைய கொள்கைகளை முழுமை பெறச் செய்ய உருவாக்கப்பட்ட வானத்தின் இத்தலைமை நபியின் பிரதிநிதித்துவமாக நிலைபெற்றுள்ளது. இதிலிருந்து இதன்

முக்கியத்துவத்தை நன்றாக கணித்துக் கொள்ளலாம். அத்துடன் எப்போதும் அல்லாஹ்வின் ஆதரவுகள் கிடத்துக் கொண்டிருக்கும் என்ற வாக்குறுதிகள் இருக்கின்றன. எனவே ஒவ்வோர் அடியிலும் அவனது உதவிகள் கிடைக்கின்றன. இந்த பணிகள் முழுமை பெறுவதற்கான ஆற்றல் எங்கிருந்து கிடைக்கிறது என உலகம் வியப்புடன் பார்க்கிறது. கிலாஃபத்தின் பதவியில் அமர வைக்கப்படுபவர் நுபுவ்வத் என்னும் ஒளியின் பிம்பமாக இருக்கின்றார். அவர் நபியின் மேன்மைகளையும் சிறப்புத்தன்மைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கிறார். மேலும் நபியின் அருள்களிலிருந்து பங்கு பெறுகிறார். தூய ஜமாஅத் கலீஃபாவை தேர்ந்தெடுத்தாலும் அல்லாஹ், கலீஃபாவை தானே உருவாக்குகிறான். இது அல்லாஹ்வால் வழங்கப்பட்ட பதவியாகும். அதிலிருந்து ஒரு கலீஃபாவை ஒருபோதும் பதவி நீக்கம் செய்ய முடியாது. அவர் நுபுவ்வத்தின் பிரதிநிதியாக பதவி வகிக்கிறார். அல்லாஹ் அப்படிப்பட்டவருக்கு, தானே ஆசிரியராகின்றான். அவருக்கு ஞானங்களை வழங்குகிறான்.

நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளத்தில் கலீஃபாவின் மீது அன்பை உருவாக்குகின்ற அதே நேரத்தில் கலீஃபாவின் உள்ளத்திலும் அவர்களுக்காக பரிவையும் பாசத்தையும் உருவாக்குகின்றான். அதன் காரணமாக அவர்கள் துன்புறும் வேளையில் கலீஃபா மிகுந்த துக்கம் அடைகின்றார். அவர்களுக்காக துஆ செய்கின்றார். அவருக்கு துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான அடையாளம் வழங்கப்படுகிறது. அவரைப் பற்றிய ஓர் அசாதாரணமான அச்ச உணர்வு

மக்களுக்கு ஏற்படுகிறது. அவர் உலகில் வாழும் மனிதர்களால் பின்பற்றப்பட தகுதியுடையவராக இருக்கின்றார். அவருக்குக் கட்டுப்படுவதும், அவரைப் பின்பற்றுவதும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு கடமையாகும். அதிலிருந்து முகந்திருப்பியவாறு மரணிப்பது அறிவீனத்தின் மரணமாகும். அவருடன் தொடர்பு வைத்திருப்பது அல்லாஹ்வுடனும் தூதருடனும் தொடர்பு வைப்பதாகும். கலீஃபா தமது காலத்தில் பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும் அன்பிற்குரிய அடியாராகவும் இருக்கின்றார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கிலாஃபத் அந்தஸ்தின் உண்மை நிலை பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்:**

''கலீஃபா உண்மையில் இறைதூதரின் நிழலாக இருக்கின்றார். எந்த மனிதரும் உலகில் நிரந்தரமாக இருப்பதில்லை. எனவே உலகின் எல்லா மனிதர்களையும் விட மிகச் சிறப்பானவர்களும் மேலானவர்களுமாகிய இறைதூதர்களை நிழலாக மறுமை வரை உலகில் நிலைநாட்ட இறைவன் விரும்பினான். எனவே இந்த உலகம் எந்த காலத்திலும் தூதுத்துவத்தின் அருள்களிலிருந்து இழப்பிற்குரியதாக ஆகி விடக் கூடாது என்ற நோக்கத்திற்காகவே இறைவன் கிலாஃபத்தை தேர்ந்தெடுத்தான்.''
(ஷஹாதத்துல் குர்ஆன், பக்கம் **57** ரூஹானி கஸாயின் தொகுதி **6** பக்கம் **353)**

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''கலீஃபாவை இறைவனே உருவாக்குகிறான் என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். கலீஃபா மனிதர்களால் நியமிக்கப்படுபவர் ஆவார் என்று கூறும் மனிதன் பொய்யன் ஆவான்....... திருக்குர்ஆனை கருத்தூன்றிப் படித்தால் அதில் ஓரிடத்தில் கூட கிலாஃபத்தை மனிதனுடன் தொடர்புபடுத்தி கூறப்படவில்லை என தெரிய வருகிறது. மாறாக, எல்லா வகையான கலீஃபாக்களைப் பற்றியும் அவர்களை நாம் உருவாக்குகிறோம் என்றுதான் அல்லாஹ் கூறுகிறான்.'' (கோன் ஹே ஜோ குதாகே காம் கோ ரோக் சகே - இறை பணியை எவர் தடுக்க முடியும்? - என்ற நூல். அன்வாருல் உலூம். தொகுதி **2** பக்கம் **11**)

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:**

''நுபுவ்வத்துக்குப் பிறகு மிகப் பெரிய பதவி (கிலாஃபத்தாகிய) இதுவாகும். அரசாங்கம் உங்களுக்கு ஏதாவது பட்டம் கொடுக்க நாங்கள் முயற்சி செய்கிறோம் என்று ஒருவர் என்னிடம் கூறினார். நான் கூறினேன்: இந்த பட்டம் ஒரு சாதாரணமானதாகும். நான் கிலாஃபத்துடன் உலகப் பேரரசர்களின் பதவியை ஒப்பிடுகையில் அந்தப் பதவியைக்கூட அற்பமானதாகக் கருதுகிறேன். நீங்கள் உங்கள் விவகாரங்களில் இறையச்சத்தையும், கண்ணியத்தையும் பேணுங்கள் என நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். எவர்களுக்கு ஆட்சேபனைகள் எழுகின்றனவோ நமது அந்த

சகோதரர்கள் கூட வீணாவதை நான் ஒருபோதும் விரும்புவதில்லை. ஏனெனில் கிலாஃபத்தின் பதவியைப் பொருத்தவரை பெரியவர்களும், எனக்கு குழந்தைகளின் அந்தஸ்தில் இருக்கின்றனர். எந்தவொரு தந்தையும் தனது ஒரு மகனும் கூட வீணாவதை விரும்ப மாட்டார்.''

(அன்வாருல் உலூம். தொகுதி **9** பக்கம் **425, 426**)

''சந்தேகமின்றி, மக்கள்தான் கலீஃபாவை தேர்ந்தெடுக்கின்றனர். ஆயினும் அத்தேர்வை இறைவன் தானே செய்ததாக குறிப்பிடுகிறான். இந்த தேர்ந்தெடுக்கும் முறையினால் நபிமார்களுக்கும் கலீஃபாக்களுக்கும் இடையே வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. இறைவன் நேரடியாக ஒருவரை கலீஃபாவாக தேர்ந்தெடுத்து நான் உம்மை கலீஃபாவாக ஆக்கி இருக்கிறேன் எனக் கூறினால் அந்த கலீஃபாவுக்கும், நபிக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இருக்க முடியாது. எனவே நபியை தேர்ந்தெடுக்கும் பொறுப்பை இறைவன் குறிப்பாக தன்னிடம் வைத்துள்ளான். கலீஃபாவை தனது அடியார்களின் மூலமாக, இறைவன் தனது விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுக்க வைக்கிறான். அவருக்கு ஆதரவளிப்பதாகவும் உதவியளிப்பதாகவும் வாக்குறுதி வழங்குகிறான்.''

(கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத். தொகுதி **3** பக்கம் **593**)

''கிலாஃபத் ஓர் இறையருளாகும். எவரும் இதில் தடையாக இருக்க முடியாது. கிலாஃபத் இறை ஒளியை நிலை நாட்ட ஒரு வழிகோலாக இருக்கிறது. அதை அழிக்க விரும்புபவர் அல்லாஹ்வின் ஒளியை அழிக்க

விரும்புகிறார். ஆயினும் அது ஒரு வாக்குறுதியாகும். அது கண்டிப்பாக நிறைவேற்றப்படுகிறது என்றாலும், அதனுடைய கால அவகாசம் நம்பிக்கை கொண்டவர்களின் கலப்பற்ற தன்மையுடன் தொடர்புடையதாகும்.......''
(கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத். தொகுதி 3 பக்கம் 420, 421)

''**இறைவனால் நியமிக்கப்படுபவர்களின் பிரதிநிதியாக இருப்பவர்களை மறுப்பது, அவர்களை எள்ளிநகையாடுவது சாதாரண விஷயமல்ல. அது நம்பிக்கை கொண்டவர்களையும் கூட ஃபாஸிக் (தீயவர்கள்) ஆக்கி விடுகிறது.** எனவே உங்கள் நாவுகளையும், எழுத்துகளையும் கட்டுப்படுத்தாதிருப்பது நல்ல விளைவுகளை உருவாக்கும் எனக் கருதாதீர்கள். நான் அப்படிப்பட்டவர்களை எனது ஜமாஅத்திலிருந்து விலக்கி விடுவேன் என இறைவன் கூறுகிறான். **ஃபாஸிக் என்பதன் பொருள், இறைவனோடு எந்தத் தொடர்பும் இல்லை. இறைவன் சார்பாக இருக்கும் அமைப்பை எவர் மதிப்பதில்லையோ இந்த (கிலாஃபத்) அமைப்பை தேவையில்லாமல் ஆட்சேபனை செய்வாரோ அவர் நம்பிக்கை கொண்டவராக இருந்தாலும் அவர் அது தொடர்பாக பேசும்போது தனது சொற்களைப் பார்க்க மாட்டார் என்றால் அவர் நிராகரிப்பாளராக மாறி மரணிப்பார் என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள்.**''
(கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத். தொகுதி 3 பக்கம் 8, 9)

**ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹுத் தஆலா) அவர்கள் கூறுகிறார்கள்:**

''...காலத்தின் கலீஃபா முழு உலகிற்கும் ஆசிரியர் ஆவார். மேலும் இது உண்மையென்றால் - நிச்சயமாக இது உண்மைதான் - பிறகு உலகின் அறிஞர்களும் உலகின் தத்துவவாதிகளும் அவருக்கு முன்னால் மாணவர் என்ற அந்தஸ்தில்தான் வருவார்கள். அவருக்கு முன்னால் ஆசிரியர் என்ற அந்தஸ்தில் வர மாட்டார்கள்........''

(அல்ஃபஸ்ல் **21**, டிசம்பர் **1966**)

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சான்றின் அடிப்படையில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுுல்லாஹுுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறுகிறார்கள்:**

**''.........சொந்த விவகாரங்களில் காலத்தின் கலீஃபாவிடம் ஏதாவது தவறு ஏற்படலாம். ஆனால் ஜமாஅத்தின் ஆன்மீக பௌதீக முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட விவகாரங்களில் அவருக்கு ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டாலும் அல்லாஹ் தனது ஜமாஅத்தைப் பாதுகாக்கிறான். ஏதாவதொரு வகையில் அவருக்கு அந்த தவறைப் பற்றி தெரிவித்து விடுகிறான்.** சூஃபிகளின் மரபுச் சொல்லில் அது இஸ்மதே ஸுுக்ரா (குறைந்த அளவிலான களங்கமற்ற தன்மை) என்று கூறப்படுகிறது. நபிமார்களுக்கு இஸ்மத்தே குப்ரா (பெரிய அளவிலான களங்கமற்ற தன்மை) கிடைக்கிறது. ஆனால் கலீஃபாக்களுக்கு இஸ்மத்தே ஸுுக்ரா (சிறிய அளவிலான கலப்பற்ற தன்மை) கிடைக்கிறது. ஆயினும் ஜமாஅத்திற்கு அழிவைத் தரக் காரணமாகும் எந்தவொரு முக்கிய தவறும் அவர்கள் மூலமாக வெளிப்பட அல்லாஹ் விடுவதில்லை. அவர்களின் தீர்ப்புகளில் மிகச் சிறிய, இயல்பான தவறுகள்

ஏற்படலாம். ஆனாலும் இஸ்லாத்திற்கு வெற்றியும், எதிரிகளுக்கு தோல்வியும் கிடைக்கக் கூடிய விளைவுதான் வெளிப்படும். ஆக, (கலீஃபாக்களாகிய) அவர்களுக்கு இஸ்மத்தே ஸுக்ரா (சிறிய அளவிலான களங்கமற்ற தன்மை) ஏற்படுவதன் காரணமாக அதற்கேற்ப அல்லாஹ்வின் நடைமுறையும் அவ்வாறே இருக்கும். **(கலீஃபாக்களாகிய) அவர்கள் வேண்டுமானால் பேசக் கூடியவர்களாக இருக்கலாம்; அவர்களின் நாவுகளும், கைகளுமே அசையும்; அவர்களின் மூளைகளே வேலை செய்யும். ஆனால் அவை அனைத்துக்கும் பின்னால் இறைவனின் சொந்த கரங்கள் இயங்கும்.** சிறு விவகாரங்களில் அவர்களிடமிருந்து சில சாதாரண தவறுகள் ஏற்படலாம். சில நேரங்களில் அவருக்கு ஆலோசனை கூறுபவரும் அவருக்கு தவறான ஆலோசனை கூறலாம். ஆனால் இந்த இடைப்பட்ட தடைகளை கடந்தவாறு அவர்களுக்கே வெற்றி கிடைக்கும். எல்லா கண்ணிகளும் ஒன்று சேர்ந்து சங்கிலியாக உருவாகும்போது அது சரியானதாக இருக்கும். எந்த ஆற்றலும் அதை முறிக்க முடியாத அளவுக்கு அது உறுதி மிக்கதாக ஆகி விடும்.''

(குத்பாத்தே மஸ்ரூர். தொகுதி **1** பக்கம் **341 - 343.** தஃப்ஸீரே கபீர் தொகுதி **6** பக்கம் **376 - 377**)

கிலாஃபத் அமைப்பின் இந்த மகத்தான, உயர்ந்த அந்தஸ்து மற்றும் பதவியைப் பொருத்தவரை மிக முக்கியமான, அடிப்படையான பொறுப்பு கிலாஃபத்துடன் மனதார தொடர்பு கொண்டிருப்பது, காலத்தின் கலீஃபாவுக்கு நிபந்தனையற்ற முறையில் முழுமையாகக் கட்டுப்படுவது

ஆகும் எனத் தெரிகிறது. கலீஃபாவை இறைவனே உருவாக்குகிறான் என்பது உறுதியான, நம்பிக்கைக்குரிய விஷயமாகும். எவர் கலீஃபாவாக ஆக்கப்படுகிறாரோ அவர் உலகில் இறைவனின் பிரதிநிதியாகவும் அனைவரையும் விட அன்பிற்குரியவராகவும் இருக்கும்போது அத்தகைய அருளுக்குரிய கலீஃபாவுடன் உள்ளத்தாலும் உயிராலும் நேசம் கொள்வதும், தன்னை முற்றிலும் அவருடைய வழியில் அர்ப்பணித்து விடுவதும் கட்டாயமானதாகும். இந்தக் கருத்து திருக்குர்ஆனிலுள்ள அந்நூர் (**24** -ஆவது) அதிகாரத்தின் கிலாஃபத் தொடர்பான வசனத்தை படிக்கும்போது நன்றாக தெளிவாகிறது. இதில் அல்லாஹ் கிலாஃபத்தின் கருத்துக்கு முன்னர் அல்லாஹ், இறைதூதருக்கு கட்டுப்படுவது பற்றிய கட்டளை இட்டிருக்கிறான். மேலும் கிலாஃபத்தைப் பற்றிக் குறிப்பிட்டதற்கு பிறகு அதற்கடுத்தபடியாக இறைதூதருக்குக் கட்டுப்படுவதைப் பற்றிய குறிப்பும் இருக்கிறது. இது தற்செயலான விஷயமல்ல. மாறாக, இதில் ஒரு மகத்தான நுட்பமான கருத்து மறைந்திருக்கிறது. அதாவது கலீஃபாவுக்குக் கட்டுப்படுவது உண்மையில் இறைதூதருக்குக் கட்டுப்படுவது ஆகும். இறைதூதருக்குக் கட்டுப்படுவதன் விளைவு, இறைதூதருக்குக் கட்டுப்படுவதற்கான உரிமையைப் போன்றே அந்த கலீஃபாவுக்குக் கட்டுப்படுவதும் அதே நன்றியுணர்வுடனும், உயிரை மாய்த்துக் கொள்ளும் பக்குவத்துடனும் இருக்க வேண்டும்.

காலத்தின் கலீஃபாவுடன் மனதார ஒன்றியிருப்பதன் முக்கியத்துவம் மற்றும் நமது கடமை தொடர்பாக **ஹஸ்ரத்**

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கூறிய இந்த ஹதீஸையும்** எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதில் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

فَإِنْ رَأَيْتَ يَوْمَئِذٍ خَلِيفَةَ اللهِ فِي الْأَرْضِ فَالْزِمْهُ وَإِنْ نُهِكَ جِسْمُكَ وَأُخِذَ مَالُكَ

''ஃபயின் ரஅய்த யவ்மயிஸின் கலீஃஃபதல்லாஹி ஃபில் அர்ழி ஃபல்ஸிம்ஹு வஇன் நுஹிக ஜிஸ்முக வ உகிஸ மாலுக''

**''அல்லாஹ்வின் கலீஃஃபா பூமியில் இருப்பதை நீங்கள் அறிந்தால் உங்கள் உடல் நார்நாராகக் கிழிக்கப்பட்டாலும் உங்கள் செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டாலும் நீங்கள் அவருடன் இணைந்து விடுங்கள்.''** (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் ஹதீஸ் எண்: **22333**)

இந்த ஹதீஸிலிருந்து கிலாஃபத்துதான் உண்மையில் உலகில் அனைத்தையும் விட பெரியதும் மதிப்புமிக்க கருவூலம் என்பதும் தெளிவாகிறது. அது உயிரையும் செல்வத்தையும் விட அதிக மதிப்புள்ள கருவூலமாகும். எனவே இந்த செல்வம் ஒரு ஜமாஅத்திற்கு அல்லாஹ்வின் புறமிருந்து வழங்கப்பட்டால் அத்துடன் இணைந்திருப்பதும் எந்நிலையிலும் பற்றிப் பிடித்திருப்பதுமே வாழவும் எஞ்சியிருப்பதற்குமான உத்தரவாதமும் ஆகும்.

## கிலாஃபத்தின் அருள்கள்

- மார்க்கத்தை உறுதிப்படுத்துதல்
- அமைதியை நிலைநாட்டுதல்
- இறைவணக்கத்தை உண்மையான முறையில் நிலைநாட்டுதல்
- கலப்பற்ற ஓரிறைமையை நிலைநாட்டுதல்
- மனிதத்துவத்திற்கு தொண்டு செய்தல்
- இஸ்லாத்தை தப்லீக் செய்தல்
- முன்னேற்றங்கள்
- ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுதல்
- வானத்தின் ஆதரவுகள்
- நம்பிக்கை கொண்ட ஜமாஅத்திற்கு வேதனையுடன் துஆ செய்யும் மக்களை உருவாக்குதல்
- ஆன்மீக வாழ்வு எஞ்சியிருத்தல்

கிலாஃபத்தின் அருள்களைப் பற்றி திருக்குர்ஆனில் பல இடங்களில் குறிப்பு உள்ளது. பொதுவாக சூரா அந்நூரின் **56** - ஆவது வசனத்தில் மிகவும் சுருக்கமாக கூறப்பட்டிருப்பது என்னவென்றால், கிலாஃபத்தின் மகத்தான அருள்களில் ஒன்று, அதன் மூலமாக மார்க்கத்திற்கு உறுதி கிடைக்கிறது. நம்பிக்கை கொண்டவர்களின் அச்சத்திற்குரிய நிலை அமைதியின்

நிலையாக மாறி விடுகிறது. இறைவணக்கம், கலப்பற்ற ஓரிறை கொள்கையின் அடிப்படை உறுதியாகி விடுகிறது. மேலும் அவை உண்மையான முறையில் நிலைநாட்டப்படுகிறது. மார்க்கத்துடன் தொடர்புடைய எல்லா துறையிலும் புத்துயிர் பிறக்கிறது. முன்னேற்றத்தின் புத்தம்புது வழிகள் திறக்கின்றன. அதன் மூலமாக வானத்தின் இந்த தலைமை நம்பிக்கை கொண்டவர்களை செயலாற்ற வைத்து வாழ்வின் உண்மையான நோக்கத்தை பெறுவதற்கு முயற்சி செய்கிறது. வழியிலுள்ள எல்லா தடைகளையும் நீக்குவதன் இரகசியத்தையும் எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு துன்பத்தையும் துக்கத்தையும் வலியையும் போக்கும் மருந்தாகத் திகழ்கின்றது. எல்லாவற்றையும் விட அதிகமாக சமுதாயத்தின் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கும் கட்டுக் கோப்பை ஏற்படுத்துவதற்கும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் முயற்சி மேற்கோள்கிறது. அல்லாஹ்வை வணங்குவதும், அவனது பண்புகளின் பிம்பமாக ஆவதும் நம்பிக்கை கொண்டவர்களின் நோக்கமாக ஆகிவிடுகிறது. அதன் வழிகாட்டல்கள், சைகைகள் மூலமாக நம்பிக்கை கொண்டவர்கள் மென்மேலும் முன்னேறுவதற்கு முயற்சி செய்கின்றனர். வானத்தின் இந்த தலைமை நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செயலாற்ற, நன்மைகளின் தகுதியைப்பெற, நன்மை செய்வதற்கு பொருத்தமான நேரம் ஆகியவற்றை விளக்குகிறது. அதன் மூலமாக இறையச்சம் என்ற வயல் செழிப்படைகின்றது. அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட கலீஃபா அல்லாஹ்வின் நாட்டத்தைப் புரிந்து நம்பிக்கை கொண்டவர்களை

அல்லாஹ்வின் குரலுக்கு செவிமடுக்குமாறு ஆயத்தம் செய்கின்றார்.

இந்த இறை அமைப்பு உலக அளவில் படைப்பினங்களின் முன்னேற்றத்திற்காகவும் பொது மக்களின் தொண்டுக்காகவும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு கவனமூட்டுவது மட்டுமின்றி அதை நடைமுறைப்படுத்துவதற்கு முறைப்படி அமைப்பை உருவாக்குகிறது. அது மனிதகுலத்திற்கு தொண்டாற்றி இறைபடைப்பினங்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கு கவனமூட்டிக் கொண்டிருக்கிறது.

வானத்தின் இந்த தலைமை மிகவும் அற்புதமானதாகும். அதன் மேன்மைகளையும், பயன்களையும், அருள்களையும் எண்ணி கணக்கிட முடியாது. ஒரு கலீஃபாவின் உள்ளம் மனித நேயத்தின் மீதுள்ள அன்பால் நிறைந்து காணப்படுகிறது. தம்மை பின்பற்றுபவர்களுடன் அவருக்கு இருக்கும் அன்பையும் நேசத்தையும் உலக உறவுகளுடன் ஒப்பிட்டுக் கூறுவது குறைமதியாகும். **அவர் பரிவு காட்டும் தாயை விட மேலானவராக இருக்கிறார். அவர் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு நேரும் துன்பத்தால் மனக் கஷ்டம் அடைகிறார்; துக்கமடைகிறார். மக்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவர் அவர்களின் முன்னேற்றத்திற்காக திட்டங்களைத் தீட்டுகிறார். அந்த திட்டங்கள் செயல் வடிவம் பெறுவதற்காக துஆ செய்து கொண்டிருக்கிறார். கலப்பற்றவர்களின் சீர்கேடுகள் அவரது துஆக்களினால்தான் சீரடைகின்றன.** பொதுவான கருணையின் எதிர்பார்ப்பிற்கேற்ப ஒரு கலீஃபா ஒவ்வொரு

நாளும் எல்லா உலகத்தையும் கண் முன்னால் கொண்டு வந்து ஒவ்வொருவருக்காகவும் நிம்மதியிழக்கிறார். ஒவ்வொருவரின் நேர்வழிக்கும் வெற்றிக்கும் வேண்டுகிறார். அவருடைய இருப்புடன் எண்ணற்ற அருள்கள் தொடர்புடையவையாக இருக்கின்றன. அவற்றிலிருந்து எண்ணிலடங்காத மக்கள் இன்பத்தைப் பெறுகின்றனர். இந்த அருட்கொடைகள் நுபுவ்வத்தின் அருட்கொடைகளின் பிரதி பிம்பமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் மகத்தான கலீஃபாக்களின் சுருக்கமான வழிகாட்டல்களின் ஒளியில் கிலாஃபத்தின் அருள்களின் ஒரு காட்சி எடுத்துக் காட்டப்படுகிறது:

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘நமது நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒரு பயங்கரமான காலம் உருவாகி விட்டது. அரபு நாட்டின் பல பிரிவினர் முர்தத் ஆகி விட்டனர். (மார்க்கத்தை விட்டு முகந்திருப்பி விட்டனர்). சிலர் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டனர். பல பொய்யான தூதர்கள் தோன்றி விட்டனர். அப்படிப்பட்ட நேரத்தில் ஒரு மிகப் பெரிய, உறுதியான உள்ளம் கொண்ட, உறுதியான இயல்பு கொண்ட, உறுதியான ஈமான் கொண்ட, தீரம் மிக்க, வீரம் மிக்க கலீஃபா தேவைப்பட்டார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர் கலீஃபா ஆனதுமே மிகப் பெரும் துக்கத்தை எதிர்கொள்ள வேண்டியது வந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியது போன்று அன்னாரது தகப்பனார் ரஸூல் (ஸல்) அவர்களுக்குப்

பின்னர் கலீஃபாவாக நியமிக்கப்பட்டபோது பெரும் குழப்பங்களும், காட்டுவாசிகளின் கிளர்ச்சியும், பொய்யான நபித்துவ வாதிகளினால் துன்பங்களும் வந்தன. அந்த துக்கம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உள்ளத்தில் இறங்கியது. அது ஏதாவது மலையின் மீது விழுந்திருந்தால் அதுவும் கீழே விழுந்து, துண்டு துண்டாகி தரைமட்டமாக ஆகி இருக்கும். ஆயினும் அல்லாஹ்வின் இயற்கைச் சட்டம் என்னவென்றால், **இறைவனுடைய தூதரின் மரணத்திற்குப் பிறகு ஒரு கலீஃபா நியமிக்கப்படும்போது தைரியம், வீரம், உறுதித்தன்மை, மதிநுட்பம் மற்றும் வலிமையான ஆன்மா ஆகியவை அவரிடம் ஊதப்படுகிறது**..........இந்த கட்டளைதான் ஷரீஅத் அளவில் அல்லாமல் கஸா கத்ர் அளவில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உள்ளத்திலும் இறங்கியது.'' (துஹ்ஃபயே கோலட்வியா. ரூஹானி கஸாயின் தொகுதி **17** பக்கம் **185, 186**)

''ஓர் இறைத்தூதர் அல்லது இறைநேசர் மரணமடையும்போது உலகில் ஒரு பூகம்பம் வந்து விடுகிறது. மேலும் அது மிகவும் அபாயமான நேரமாக இருக்கிறது. ஆனால் அல்லாஹ் ஒரு கலீஃபா மூலமாக அதை நீக்குகின்றான். பிறகு அந்த கலீஃபா மூலமாக புதிதாக சீர்திருத்தமும் உறுதித்தன்மையும் ஏற்படுகிறது.''

(மல்ஃபூஸாத். தொகுதி **4** பக்கம் **384)**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

**''மலக்குகளிடமிருந்து அருளைப் பெறுவதற்கு இன்னொரு வழிமுறை என்னவென்றால், அல்லாஹ்வால் நிலைநாட்டப்பட்ட கலீஃபாக்களுடன் கலப்பற்ற தொடர்பு**

**இருக்க வேண்டும்.** அவர்களுக்குக் கட்டுப்பட வேண்டும்......உங்களுக்கு இறைவன் புறமிருந்து புதிய உள்ளங்கள் கிடைக்கும். அவற்றில் அமைதி இறங்கும்...... தொடர்பை உருவாக்குவதன் விளைவாக உங்களிடம் ஒரு மகத்தான மாறுதல் ஏற்பட்டு விடும்; உங்களின் தைரியங்கள் உயர்ந்து விடும்; உங்கள் ஈமானும் உறுதியும் அதிகமாகி விடும்; உங்களுக்கு வலுவூட்டுவதற்காக மலக்குகள் நிற்பார்கள்; அவர்கள் உங்களுடைய உள்ளங்களில் உறுதித்தன்மையையும் தியாகத்தின் ஆன்மாவையும் ஊதிக் கொண்டிருப்பார்கள். எனவே **உண்மையான கலீஃபாக்களுடன் தொடர்பு வைப்பது மலக்குகளுடன் தொடர்பை உருவாக்கி விடுகிறது.** மேலும் மனித(னின் உள்ளத்தி)னை இறை ஒளிகள் இறங்கும் இடமாக ஆக்கி விடுகிறது. இன்னும் கூறுவதென்றால், புதிதாக சீர்திருத்தமும் உறுதித்தன்மையும் ஏற்படுகிறது.''
(கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத். தொகுதி **3** பக்கம் **392)**

''அல்லாஹ் உங்களுக்கு கிலாஃபத்தின் அருட்கொடையை வழங்கியிருக்கிறான். அதிலிருந்து (மற்ற முஸ்லிம்களாகிய) அவர்கள் இழப்பிற்குரியோராக இருக்கின்றனர். இந்த கிலாஃபத் கொஞ்ச அஹ்மதிகளையும் ஒன்று சேர்த்து தனியாக ஒருபோதும் பெற முடியாத அப்படிப்பட்ட ஆற்றலை அவர்களுக்கு வழங்கி விட்டது. எல்லா ஜமாஅத்திலும் பலவீனமானவர்களும் இருக்கின்றனர். தனியாக எல்லா சுமைகளையும் தாங்கிக் கொள்கின்ற அப்படிப்பட்ட ஆற்றல்மிக்கவர்களும் இருக்கின்றனர். ஆனால் எல்லா

மக்களையும் ஒரு கயிற்றால் கட்டுவது தலைமையகத்தின் மூலமாக மட்டுமே முடியும். தலைமையகத்தின் பயன் என்னவென்றால், அது பலவீனமானவர்களை கீழே விழ வைப்பதில்லை. மற்றவர்கள் ஆற்றல் கொண்டவர்களுக்கு முன்னால் அற்பமானவர்களாகி விடும் அளவுக்கு அவர்களை முந்திச் செல்ல விடுவதுமில்லை. தலைமையகம் இல்லையென்றால் பலவீனமானவர் கீழே விழுவார். தலைமையகம் இல்லையென்றால் ஆற்றல் மிக்கவர் எந்த அளவுக்கு முன்னேறிச் சென்று விடுவார் என்றால், இவர் வானத்தில் இருக்கிறார்; நாம் பூமியில் இருக்கிறோம். நமக்கும் அவருக்கும் இடையில் என்ன தொடர்பு இருக்கிறது? என்று மற்றவர்கள் கருதுவார்கள். ஆனால் இஸ்லாமிய அமைப்பில் வந்து அவர்கள் எந்த அளவுக்கு சரிசமமானவர்களாக ஆகி விடுகின்றனர் என்றால், சில சந்தர்ப்பத்தில் செல்வந்தர் ஏழைகளுக்கு இடையில் எந்த வித்தியாசமும் இருப்பதில்லை.''

(கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத். தொகுதி **3** பக்கம் **358, 359**)

''ஜமாஅத் பல்வேறு மொழிகளில் திருக்குர்ஆனின் மொழியாக்கங்களை வெளியிட்டிருப்பது கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்பின் அருளேயாகும். இல்லையென்றால் இந்த மொழியாக்கங்களில் ஒன்றைக்கூட வெளியிடுவதற்கு ஜமாஅத்தில் ஒரு நபர் கூட செல்வந்தராக இல்லை. அவ்வாறே ஒருவர் கூட தனியாக எந்த மொழியிலாவது திருக்குர்ஆனின் மொழியாக்கத்தை வெளியிடும் அளவுக்கு எந்த செல்வாக்கையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் நாம் ஒட்டு மொத்தமாக இப்போது ஆங்கிலம், டச்சு, ரஷ்ய

மொழி, ஸ்பானிஷ், புர்துக்கேஸி, இத்தாலியன், ஜெர்மன், ஃபிரான்ஸிஸி ஆகிய மொழிகளில் திருக்குர்ஆனின் மொழியாக்கங்களை செய்து விட்டோம்........ எந்த மொழியை அறிபவரும் இதிலிருந்து பயன் பெறாமல் இருக்கக் கூடாது என்பது நமது எண்ணமாகும். இந்த வகையில் நாம் எல்லா முக்கியமான மொழிகளிலும் திருக்குர்ஆன் மொழியாக்கத்தை வெளியிட வேண்டும்.'' (கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத். தொகுதி **3** பக்கம் **569)**

இங்கு இன்னொன்றையும் கூறிக் கொள்கிறோம். இப்போது அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஏற்பாட்டின் கீழ் மொழியாக்கம் செய்யப்பட்ட திருக்குர்ஆனின் எண்ணிக்கை **74** ஆகும். **2015** - ஆம் ஆண்டு சிங்களம், பர்மி ஆகிய மொழிகளில் திருக்குர்ஆனின் முழு மொழியாக்கம் வெளியானது. (அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் **25,** செப்டம்பர் **2015** முதல் **01** அக்டோபர் **2015)**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறுகிறார்கள்:**

''இரண்டாம் வல்லமை (அதாவது கிலாஃபத்) இறைவன் சார்பாக வழங்கப்பட்டிருக்கும் ஒரு மிகப் பெரிய அருட்கொடையாகும். அதன் குறிக்கோள் சமுதாயத்தை ஒன்று சேர்ப்பதும் பிரிவினையிலிருந்து பாதுகாப்பதும் ஆகும். இது எப்படிப்பட்ட பிணைப்பு என்றால் இதில் ஜமாஅத் முத்துகளைப் போன்று கோர்க்கப்படுகின்றன. ஒரே சரட்டில் கோர்க்கப்பட்ட முத்துக்களே அழகாகவும்

பாதுகாப்பாகவும் இருக்க முடியும். முத்துக்கள் பிரிந்திருந்தால் அவை பாதுகாப்பாகவும் இருக்க முடியாது; அழகாகவும் இருக்க முடியாது. இரண்டாம் வல்லமை இல்லாவிட்டால் உண்மையான மார்க்கம் ஒருபோதும் முன்னேற்றம் காண முடியாது. எனவே இந்த வல்லமையுடன் முழுமையான கலப்பற்ற தன்மையுடனும், அன்புடனும், நன்றியுணர்வுடனும், கொள்கைப் பிடிப்புடனும் தொடர்பு வையுங்கள். கிலாஃபத்திற்கு கட்டுப்படும் உணர்வை நிரந்தரமாக்குங்கள். அதற்கு எதிரில் மற்ற அனைத்து உறவுகளும் குறைவாக இருக்கும் அளவுக்கு அதனுடனுள்ள அன்பின் உணர்வை அதிகமாக்குங்கள். இமாமுடன் இருக்கும் தொடர்பிலேயே அனைத்து அருள்களும் உள்ளன. மேலும் எல்லாவிதமான குழப்பங்களுக்கும் சோதனைக்கும் எதிரில் அவரே உங்களின் கேடயம் ஆவார்.''

(மஷ்அலே ராஹ் தொகுதி **5** பகுதி **1** பக்கம் **4, 5** மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத் பதிப்பு மே **2007)**

''இரண்டாம் வல்லமையாகத் திகழும் இந்த கிலாஃபத் அமைப்பு நிலைபெற்றிருக்கக் கூடியதாகும் - இன்ஷா அல்லாஹ். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கலீஃபாக்களின் **30** வருட கிலாஃபத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. அது **30** ஆண்டுகள் இருந்தது என்றால், அந்த **30** ஆண்டு காலகட்டம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கேற்ப இருந்தது. இந்த நிரந்தரமான காலகட்டமும் அவர்களின் முன்னறிவிப்புக்கேற்பவே ஆகும். மறுமை வரை என்ன நடக்கும் என்பதை அல்லாஹ்வே

நன்கறிவான். ஆனால் உங்களிடம் நன்மை, இறையச்சம் நிலைபெற்றிருக்குமென்றால் இந்த கிலாஃபத் காலகட்டம் உங்களின் தலைமுறை, உங்களின் தலைமுறையின் தலைமுறை, அவர்களின் தலைமுறையின் தலைமுறை என எண்ணற்ற தலைமுறைகளாக சென்று கொண்டிருக்கும் - இன்ஷா அல்லாஹ் என்பதை கூறி விடுகிறேன்.''

(குத்பா ஜுமுஆ **27,** மே **2005.** அக்பார் பத்ர் கிலாஃபத் சத் சாலா ஜுப்லி சிறப்பிதழ் **2008** பக்கம் **17, 18)**

''அல்லாஹ் எப்போதும் அஹ்மதிய்யா கலீஃபாக்களின் தலைமையில் ஜமாஅத்தின் அச்சத்தை அமைதியாக மாற்றியிருக்கிறான். மேலும் அந்த சோதனைகளில் (உண்மை மார்க்கத்திற்கு) முன்னரை விட அதிகமாக உறுதிப்பாட்டையும் வல்லமையையும் வழங்கியிருக்கிறான். முன்னர் உலகின் கண்கள் கண்டதைப் போன்று இப்போதும் உலகம் கண்டு கொண்டிருக்கிறது. இனிமேலும் கண்டு கொண்டேயிருக்கும். இறைவனால் ஆதரவளிக்கப்பட்ட கிலாஃபத் அமைப்பின் நிழலில் கீழ் உள்ள ஜமாஅத்தை அழிப்பதற்காக உறுதிபூண்டு, நெருப்பை மூட்டுபவர்கள் **ஜமாஅத்திற்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. அவர்களின் சதித் திட்டங்களின் மண்ணை இறைவன் அவர்களின் தலை மீதே விழ வைப்பான்.** அந்த நெருப்பிலேயே அவர்களின் ஏக்கங்கள் அழிக்கப்பட்டு விடும். இவர்களுக்கு முன்னும் இந்த ஏக்கங்களை தமது நெஞ்சங்களில் கொண்டு எழுந்தவர்கள் மண்ணில் புதையுண்டு போனர். இவர்களும் புதையுண்டு போவர். ஆனால் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை

எவரும் ஒரு நொடிப்பொழுது கூட தடை செய்ய முடியாது. அல்லாஹ் எப்போதும் அவர்களின் மண்ணை தொலைவில் எறிந்து விட்டு அஹ்மதிய்யா கிலாஃபத்தை பாதுகாக்கிறான். இவ்வாறாக இறை இயக்கங்களை பாதுகாக்கக் கூடிய அந்த உயிருள்ளவனும், நிலைபெற்றிருப்பவனும், ஆற்றல் கொண்டவனுமாகிய இறைவன் நான்தான் என தன் வலுவான வல்லமையின் கரத்தை உலகிற்குக் காட்டுகிறான். இந்த ஆதரவையும், உதவியையும் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''உலகம் என்னை அடையாளம் கண்டுகொள்ளாது. ஆனால் என்னை அனுப்பியவன் என்னை அறிகின்றான். இவர்கள் எனது அழிவை விரும்புகிறார்கள். அது இவர்களுடைய தவறாகும். அது முற்றிலும் இவர்களின் பேறிழந்த நிலையாகும். நான் உண்மையான எஜமானனின் கைகளால் நடப்பட்ட மரமாவேன்....... மக்களே! அந்தக் கை இறுதி வரை என்னுடன் நன்றியுணர்வுடன் இருக்கும் கையாகும் என்பதை உறுதியாக புரிந்து கொள்ளுங்கள்.''

(துஹ்ஃபா கோலட்வியா. ரூஹானி கஸாயின் தொகுதி **17** பக்கம் **49, 50)**

''எதிரிகள் ஜமாஅத்தை உலகின் சில இடங்களில் பரவுவதிலிருந்து தடுப்பதற்கான தோல்வியுறும் முயற்சியை செய்தனர். ஆனால் அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மகனின் கைகளின் மூலமாக இஸ்லாம் மார்க்கத்தையும் தனது மஹ்தியின் போதனைகளையும் உலகின் மூலை முடுக்குகள் வரை சென்றடைய

வைப்பதற்காக தஹ்ரீகே ஜதீதின் எத்தகைய மகத்தான திட்டத்தை துவக்கினான் என்றால், அதன் உள்ளம் கவரும் ஓர் அருள் இன்று M.T.A - வின் வடிவத்தில் நமக்குக் கிடைத்திருக்கிறது. அல்லாஹ் இந்த அருட்கொடையை வழங்கி காலத்தின் கலீஃபாவின் குரலை முழு உலகிற்கும் பொதுவானதாக ஆக்கி விட்டான்.''

(கிலாஃபத்தே அஹ்மதிய்யா நூற்றாண்டு சிறப்பிதழ் **2008,** தஹ்ரீகே ஜதீது சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா பாகிஸ்தான் பக்கம் **XV**)

இன்று அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்திற்கும் காலத்தின் கலீஃபாவுக்கும் இடையில் அல்லாஹ்வின் மீதான அன்பும், அழியாத உறவும் நிலைநாட்டப்பட்டு விட்டது. அஹ்மதி ஆண்கள், பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் ஆகிய அனைவரும் காலத்தின் கலீஃபாவுக்கு எந்த அளவுக்கு நெருக்கமாகி விட்டார்கள் என்றால், இது இறைவனுடைய ஆதரவினால் அன்றி சாத்தியமில்லை. முழு உலகிலும் கிலாஃபத்தின் மீது நேசம் கொண்டவர்கள் சிறகை விரித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் கிலாஃபத்தின் வடிவில் கிடைக்கும் அல்லாஹ்வின் கயிற்றை பிடித்தவாறு முழு உலகிலும் இஸ்லாத்தின் அமைதி, அன்பு ஆகியவற்றின் அழகிய போதனையின் கொடியை உயரப் பறக்க விட்டுக் கொண்டிருக்கின்றனர். அல்லாஹ் கிலாஃபத்தின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தை ஒரே கையில் ஒன்று சேர்த்திருக்கின்றான். அவர்களை கிலாஃபத்தின் அருள் என்ற கயிற்றில் பிணைத்திருக்கிறான். இதுவே இறைவனின் ஆதரவு பெற்ற ஜமாஅத் ஆகும். இது உலகின் எல்லா

தொலைத் தொடர்புகளையும் பயன்படுத்தியவாறு ஒவ்வொரு மார்க்கம், மதம், இனத்தைச் சேர்ந்த மக்கள் வரை உண்மையான மார்க்கத்தின் தூதை எட்ட வைக்கிறது. கிலாஃபத்தின் விட்டில் பூச்சிகளாகிய இவர்கள் எல்லா பொழுதும் (உண்மையான மார்க்கத்தை) பரப்புவதில் ஈடுபட்டிருக்கின்றனர். மேலும் உதயமாகக் கூடிய ஒவ்வொரு நாளும் அஹ்மதிய்யத் என்னும் உண்மை இஸ்லாத்திற்கு முன்னேற்றம் மற்றும் வெற்றிகளின் நாளாகவே, நம்பிக்கையுடன் உதயமாகின்றது. இதற்குப் பெயர்தான் மார்க்கத்தை உறுதிப்படுத்துதல் ஆகும்.

எனவே அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களிடம் கிலாஃபத்தை நிலைநாட்டுவதாகவும், அச்சத்திற்குப் பிறகு அமைதியை வழங்குவதாகவும், மார்க்கத்தை உறுதிப்படுத்துவதாகவும் வழங்கிய வாக்குறுதி நிறைவேறியதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் சான்றாக விளங்குகிறது. எனவே இந்த அருள்களிலிருந்து நிரந்தரமான பயன்களைப் பெறுவதற்காக நமது வருங்கால தலைமுறைகளை பாதுகாப்பதற்காக கிலாஃபத்துடன் இணைந்திருங்கள். எப்போதும் கிலாஃபத்துடன் சேர்ந்திருங்கள். உங்கள் குழந்தைகளுக்கும் எப்போதும் இந்த பாடத்தையே கற்றுக் கொடுங்கள். மேலும் உங்கள் துஆக்கள், கலப்பற்றதன்மை, நன்றியுணர்வு ஆகியவற்றுடன் காலத்தின் கலீஃபாவுக்கு உதவி செய்பவர்களாக இருங்கள். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.''(கிலாஃபத்தே அஹ்மதிய்யா நூற்றாண்டு சிறப்பிதழ் **2008**, தஹ்ரீகே ஜதீது சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா பாகிஸ்தான் பக்கம் **XVI**)

“கலீஃபாவை அல்லாஹ், தானே உருவாக்குகிறான் என்பது நமது ஈமான் ஆகும். அவருடைய தேர்வில் எந்த குறையும் இருப்பதில்லை. **எவருக்கு அல்லாஹ் இந்த ஆடையை அணிய வைக்கிறானோ அவரிடமிருந்து எவரும் அந்த ஆடையை களைய வைக்க முடியாது; அல்லது பிடுங்கிக் கொள்ள முடியாது.** அவன் ஒரு பலவீனமான அடியாரை தேர்ந்தெடுக்கிறான். சில நேரத்தில் மக்கள் அவரை அற்பமாகவும் கருதுகின்றனர். ஆனால் அல்லாஹ் அவரை தேர்ந்தெடுத்து அவர் மீது தனது மகத்துவம் மற்றும் கம்பீரத்தின் எத்தகைய தோற்றத்தை வெளிப்படுத்துகிறான் என்றால், அவருடைய இருப்பு உலகிலிருந்து நீங்கி இறைவனின் வல்லமைகளில் மறைந்து விடுகிறது. அப்போது அல்லாஹ் அவரை தூக்கி தனது மடியில் அமர வைக்கிறான். மேலும் எல்லா நிலையிலும் தனது ஆதரவையும், உதவியையும் அவருக்கே வழங்குகிறான். **தனது ஜமாஅத்தைப் பற்றி அவருடைய உள்ளத்தில் எந்த அளவுக்கு வேதனையை உருவாக்குகிறான் என்றால், அவர் அந்த வேதனையை தனது வேதனையை விட அதிகமாக உணர்கின்றார். தனக்கென்று ஒரு வேதனைப்படுபவர், தனக்காக இறைவனிடம் துஆ செய்பவர் தனக்கென்று அனுதாபம் காட்டுபவர் ஒருவர் இருக்கின்றார் என ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் உணர்கின்றனர்.”** (அல்ஃபஸ்ல் நாளிதழ். 30 மே 2003 பக்கம் 2, கிலாஃபத்தே அஹ்மதிய்யா நூற்றாண்டு சிறப்பிதழ் 2008, பக்கம் 17)

“ஜமாஅத் சகோதரர்களுக்கு கிலாஃபத்துடன் இருக்கும் தொடர்பும் காலத்தின் கலீஃபாவுக்கு ஜமாஅத்

சகோதரர்களுடன் இருக்கும் தொடர்பும் எத்தகையது என்றால் அது உலகவாதிகளின் கற்பனைக்கும் அப்பாற்பட்டதாகும். அதை அவர்களால் சிந்தித்துப் பார்க்கவும் முடியாது."

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹுத் தஆலா) அவர்கள் மகத்தான உண்மையைக் கூறினார்கள்: **"ஜமாஅத் மற்றும் கலீஃபா ஒரே இருப்பின் இரு வேறு பெயர்களாகும்.** எவ்வாறிருப்பினும் ஜமாஅத்துக்கும் கிலாஃபத்துக்கும் இடையிலுள்ள இந்தத் தொடர்பு மாநாடுகளின்போது மேலும் அதிகமாக வெளிப்படுகின்றது. அல்லாஹ்வின் அருளால் கனடா அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வின் தொடர்பில் மிகவும் அதிகமாக முன்னேறியுள்ளது என்பதை அறிந்து எனக்கு மிக்க மகிழ்ச்சி - அல்ஹம்து லில்லாஹ். அல்லாஹ் அவர்களின் இந்த தொடர்பை மேலும் அதிகமாக்கிக் கொண்டே செல்வானாக. இது தற்காலிகமான உணர்வாக இருக்க வேண்டாம். நீங்கள் எப்போதும் அன்பு மற்றும் நன்றியுணர்வை வெளிப்படுத்தி இருக்கின்றீர்கள். 27 மே (2005) அன்று நான் கிலாஃபத்தின் முக்கியத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு குத்பா கொடுத்தபோது ஜமாஅத் அளவிலும், பல்வேறு இடங்களிலிருந்து தனிப்பட்ட முறையிலும், முதன் முதலாகவும் நன்றியுணர்வை வெளிப்படுத்தியவாறு அதிகமான அளவில் கடிதங்கள் எனக்கு கனடாவிலிருந்து கிடைத்தன. அன்பு நன்றியுணர்வின் இந்த வெளிப்பாடும் வாதமும் ஏதாவது தற்காலிக உணர்வினால் இருக்கக் கூடாது. மாறாக,

என்றும் இருக்கக் கூடியதாகவும் நிரந்தரமானதுமாக இருக்கக் கூடியதாகவும் உங்கள் தலைமுறைகளிலும் தொடரக் கூடியதாகவும் நிலைபெறக் கூடியதாகவும் அல்லாஹ் இருக்கச் செய்வானாக.''

(குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி **3** பக்கம் **388, 389. 2005 -** ல் காதியானில் அச்சிடப்பட்டது)

நைஜீரியா ஜமாஅத்தை தொடர்பு படுத்தி ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கிலாஃபத்தின் அருள்களைக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

''நைஜீரியா ஜமாஅத் கிலாஃபத்தின் அருள்களை நேரடியாகக் கண்டுள்ளது. நீங்கள் இந்த அருட்கொடைக்கு மிக அதிகமாக மதிப்பளிக்க வேண்டும். இங்கு பள்ளிவாயில்களுடன் கிலாஃபத்தை விட்டும் தனியாக பிரிந்து சென்றவர்களின் நிலை இன்று எவ்வாறு இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்களுக்கு எந்த மதிப்புமில்லை. ஆனால் எவர்கள் கிலாஃபத்தின் அருட்கொடையுடன் இணைந்திருந்தார்களோ எவர்கள் தமது பைஅத் நிபந்தனைகளை பாதுகாக்க முயற்சி செய்தார்களோ அல்லாஹ் அவர்களுக்கு எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கியிருக்கிறான். இன்று ஒவ்வொரு நகரத்திலும் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான காட்சியை நீங்கள் கண்டு கொண்டிருக்கின்றீர்கள். இன்று நீங்கள் இங்கு ஆயிரக்கணக்கில் இருப்பது கிலாஃபத்தோடு மட்டுமே அருள் இருக்கிறது என்பதற்கு சான்றாகும். எனவே எப்போதும் உங்கள் பொறுப்பை புரிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. இந்த

அருட்கொடையிலிருந்து அருளைப் பெற்றுக் கொண்டே செல்வீர்களாக. ஆமீன்.''

(அஹ்மதிய்யா கிலாஃபத் நூற்றாண்டு விழாவின் தாக்கங்கள் **2008** பக்கம் **76, 77**)

ஹுஸூர் அவர்கள் ஆப்பிரிக்காவின் சுற்றுப் பயணத்திலிருந்து வெற்றிகரமாக திரும்பியபோது U.K லஜ்னா இமாயில்லாஹ் **1** மே **2008** அன்று ஹுஸூர் அவர்களுக்கு ஒரு வரவேற்பு நிகழ்ச்சி நடத்தியது. அதில் ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நுட்பமான முறையில் இயற்றிய அல்வஸிய்யத் என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு இவ்வாறு கூறினார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்து வைக்கிறேன். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் உங்களின் திரும்புதலுக்கான நேரம் அருகில் உள்ளது. ஒரு மண்ணறையை நிலைநாட்டுங்கள். அதில் உயர்தரமான மக்களும், தியாகம் செய்பவர்களும் அடக்கம் செய்யப்படுவார்கள் என்று கூறியபோது அவர்கள் அல்வஸிய்யத் என்ற பெயரைக் கொண்ட ஒரு நூலை எழுதினார்கள். அதில் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''எனவே அன்பிற்குரியவர்களே! எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை நாசமாக்கிக் காட்டுவதற்காக அல்லாஹ் இரண்டு வல்லமைகளைக் காட்டுகிறான். தொன்றுதொட்டு இதுவே அல்லாஹ்வின் நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது. எனவே அல்லாஹ் தனது தொன்மையான நடைமுறையை விட்டு விடுவது

சாத்தியமில்லை. எனவே நான் உங்களிடம் கூறிய விஷயங்களினால் நீங்கள் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளங்கள் கவலையடைய வேண்டாம். ஏனெனில் உங்களுக்கு இரண்டாம் வல்லமையைக் காண்பதும் அவசியமாகும். அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. நான் செல்லாத வரை அந்த இரண்டாம் வல்லமை வர முடியாது. ஆனால் நான் சென்றுவிடும்போது பிறகு இறைவன் அந்த இரண்டாம் வல்லமையை உங்களுக்கு அனுப்பி விடுவான். அது எப்போதும் உங்களுடன் இருக்கும்.''

(அல்வஸிய்யத். ரூஹானி கஸாயின் தொகுதி **20** பக்கம் **305**)

நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த கட்டளை, இந்த நற்செய்தி கடந்த நூறு ஆண்டுகளாக உண்மையாகி இருப்பதைக் கண்டோம். மேலும் முதல் கிலாஃபத்தின் நேரத்தில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். இனி அஹ்மதிய்யத் சில நாள் விருந்தினர்தானே என்பது மக்களின் எண்ணமாக இருந்தது. பிறகு இரண்டாம் கிலாஃபத்தின் காலகட்டத்தில் உட்புறமான குழப்பமும் தோன்றியபோது பைகாமிகள் என்றும், லாஹூரிகள் என்றும், கைர் முபாயிஃ என்றும் அழைக்கப்படுகின்ற கிலாஃபத்தை மறுத்தவர்கள் ஜமாஅத் அமைப்பை நடத்துவதற்கு இப்போது அஞ்சுமன் உரிமை பெற்றதாகும்; கிலாஃபத்தின் எந்தத் தேவையும் இல்லை என்பதில் அதிக அழுத்தம் கொடுத்தனர். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி)

அவர்களுக்கு அப்போது **24** வயதுதான் இருக்கும். அந்த நேரத்தில் இஸ்லாத்தின், அஹ்மதிய்யத்தின், ஜமாஅத் அமைப்பின் தூண்கள் எனக் கருதப்பட்ட மாபெரும் படித்த மார்க்க அறிஞர்கள் அப்போது தனியாக பிரிந்து விட்டனர். சிலர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் இருந்தனர். ஆனால் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் **52** ஆண்டு கால கிலாஃபத் காலகட்டம் ஒவ்வொரு நாளும் முன்னேற்றத்தின் ஒரு புதிய மைல் கல்லைக் கடந்து சென்று கொண்டிருந்தது என்பதை நாம் காண்கிறோம். அவர்களின் காலகட்டத்தில் ஆப்பிரிக்காவில் நமது ஜமாஅத்தின் கொள்கை பரப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. ஐரோப்பாவில் கொள்கை பரப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. கிலாஃபத்தின் **10** ஆண்டுகள் நிறைவடைந்த உடனே இங்கு இலண்டனிலும் அவர்கள் இந்த பள்ளிவாயிலுக்கான அடிக்கல்லை நாட்டினார்கள்.

பிறகு மூன்றாவது கிலாஃபத்தின் காலகட்டம் வந்தது. இதிலும் குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகளில் - அங்கு ஒரு காலத்தில் இங்கிலாந்தின் காலனியாக இருந்த நாடுகளில் அஹ்மதிய்யத் நன்றாக பரவியது. கணிசமான அளவுக்கு விரிவடைந்தது.

பிறகு நான்காவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் நாம் ஒவ்வொரு நாளும் முன்னேற்றத்தின் ஒரு புதிய அத்தியாயத்தைக் கண்டோம். ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் **M.T.A** மூலமாக மட்டுமே உலகின் மூலைமுடுக்குகள் வரை ஜமாஅத்தின் குரல் எட்டியது.

‘இரண்டாம் வல்லமை வருவது அவசியமாகும்; ஏனெனில் அது நிரந்தரமானதாகும். எப்போதும் இருக்கக் கூடியதாகும்’ என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று, முன்னேற்றத்தின் படித்தரங்களையும் கடந்து சென்று கொண்டிருப்பவைதான் எப்போதும் நிலைத்திருக்கின்றன. ஆக, அல்லாஹ்வின் அருளால் கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டதன் காரணத்தால் ஜமாஅத் முன்னேற்றமடைந்து கொண்டு சென்றது.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அல்லாஹ் எனக்கு இந்த பதவியைக் கொடுத்தபோது ஜமாஅத் எவ்வாறு செல்லும் என்ற அச்சம் எனக்கு இருந்தாலும் அல்லாஹ் எல்லாவற்றையும் தன் கையில் எடுத்துக் கொண்டான். மேலும் எல்லாவிதமான ஆறுதலையும் வழங்கினான். முன்னேற்றத்தின் பாதையில் ஜமாஅத் முன்பு எவ்வாறு விரைந்து சென்று கொண்டிருந்ததோ அவ்வாறே இன்றும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. ஏனெனில் இது இறைவனின் வாக்குறுதியாகும். நான் உமது ஜமாஅத்தை பூமியின் எல்லைகள் வரை எட்ட வைப்பேன் என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய வாக்குறுதியாகும். அதற்கேற்ப அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் பூமியின் எல்லைகள் வரை பரவிக் கொண்டிருக்கிறது. மக்கள் கூட்டம் கூட்டமாக இதில் இணைந்து கொண்டும் இருக்கின்றனர்.

ஆக, இதிலிருந்து அல்லாஹ்வுக்கு தனது அன்பிற்குரியவர்களின் கண்ணியத்தைப் பாதுகாப்பது பற்றி அதிக கவனம் இருக்கிறது எனத் தெரிகிறது. உண்மையில் அல்லாஹ்விடம் தனது சில பணிகள் இருக்கின்றன. அவற்றை அவன் சில மக்களின் மூலமாக செய்ய வைக்கின்றான். இவ்வுலகில் அவன் அனுப்புகின்ற நபிமார்களின் மூலமாக உலகில் தனது போதனையையும் தனது அமைப்பையும் நிலைநாட்ட விரும்புகிறான். நபிமார்களுக்குப் பின்னர் அவர்களை ஏற்றுக் கொள்பவர்கள் மூலமாக அந்த அமைப்பை கிலாஃபத்தின் மூலமாக நிலைபெறச் செய்கிறான்; மேலும் முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டே செல்கின்றான் எனத்தெரிகிறது.''

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல். கிலாஃபத்தே அஹ்மதிய்யா நூற்றாண்டுவிழா சிறப்பிதழ். **25** ஜூலை - **7** ஆகஸ்டு **2008** பக்கம் **16,** தஅஸ்ஸுராத் கிலாஃபத்தே அஹ்மதிய்யா நூற்றாண்டு விழா சிறப்பிதழ் **2008** பக்கம் **89 - 91**)

ஹுஸூர் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு நற்செய்தி வழங்கியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

''ஐந்தாவது கிலாஃபத்துடன் கிலாஃபத்தின் புதிய நூற்றாண்டில் நாம் நுழைகின்ற இந்த காலகட்டம் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் மற்றும் வெற்றிகளின் காலகட்டமாகும். நான் உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். அல்லாஹ்வின் ஆதரவிற்கான எத்தகைய வாசல்கள் திறந்திருக்கின்றனவென்றால், திறந்து கொண்டே செல்கின்றனவென்றால் வரக்கூடிய ஒவ்வொரு நாளும்

ஜமாஅத்தின் வெற்றிகளுக்கான நாளை அருகில் கொண்டு வருகிறது. நான் என்னைப் பார்க்கும்போது வெட்கமடைகிறேன். நான் ஒரு பலவீனமான, வீணாண, தகுதியற்ற, பாவமான மனிதனாவேன். இறைவன் என்னை இந்த அந்தஸ்தில் நிறுத்தி இருப்பதற்கான ஞானம் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் அகப்பார்வையுடன் கூறுகிறேன். இறைவன் இந்த காலகட்டத்தை தனது எல்லையற்ற ஆதரவையும் உதவியையும் வழங்கியவாறு முன்னேற்றத்தின் மிகப் பெரும் சாதனையை கடந்து கொண்டே செல்ல வைப்பான். இன்ஷா அல்லாஹ். இக்காலகட்டத்தில் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை தடுப்பவர் எவருமில்லை. இனிவரும் காலத்திலும் ஒருபோதும் இந்த முன்னேற்றம் தடைபடாது. கலீஃபாக்களின் இத்தொடர் சென்று கொண்டே இருக்கும். அஹ்மதிய்யத் முன்னேற்றப் பாதையில் முன்னேறிக் கொண்டே இருக்கும்.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், கிலாஃபத்தே அஹ்மதிய்யா நூற்றாண்டு விழா சிறப்பிதழ் **25** ஜூலை **- 7** ஆகஸ்ட் **2008,** பக்கம் **12,** தஅஸ்ஸுராத் கிலாஃபத்தே அஹ்மதிய்யா நூற்றாண்டு விழா சிறப்பிதழ் **2008** பக்கம் **112, 113**)

கூறுகிறார்கள்: ஜமாஅத் உறுப்பினர்கள் கலீஃபாவை மிகவும் நேசிக்கின்றனர்; கலீஃபாவும் அவர்களை மிகவும் நேசிக்கின்றார். மேலும் அவர்கள் அனைவரும் இறைவனை நேசிக்கின்றனர். இந்த பரஸ்பர நேசம் எப்போதும் நிலைத்திருக்கும். இன்ஷா அல்லாஹ். (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் **11** ஜூலை **- 17** ஜூலை **2008,** பக்கம் **10,** தஅஸ்ஸுராத் கிலாஃபத்தே அஹ்மதிய்யா

ஜமாஅத்தின் அருளைப் பற்றி எடுத்துக் கூறியவாறு கலீஃபா அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ் தனது அருளால் **14** நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஓர் அருளை இறக்கி இருக்கிறான். அது பின்னர் வந்தவர்களை முன்னவர்களுடன் இணைத்து விட்டது. எனவே இந்த அருளை மதிப்பதும் அதை எப்போதும் நினைவில் கொள்வதும் அதிலிருந்து பலன் பெறுவதும் ஒவ்வோர் அஹ்மதிக்கும் கடமையாகும். பின்னர் இந்த அருளுக்குப் பிறகு கிலாஃபத்தின் அருளையும் நிலைநாட்டினான். மேலும் இதனுடன் கலப்பற்ற நன்றியுணர்வுடன் கூடிய தொடர்பை வைப்பதும் அவசியமாகும். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்டதாக வாதிடும் நாம் பைஅத் நிபந்தனைகளின்படி இறையச்சத்துடன் செயல்படுவதும் கடமையாகும். உங்களுக்கு இரண்டாம் வல்லமையை காண்பதும் அவசியமாகும் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வது மட்டும் போதும் எனக் கூறுபவர்கள்; கலீஃபாவிடம் பைஅத் செய்வது அவசியமில்லை என்று கூறுபவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்திற்கு வெளியே சென்று விடுகிறார்கள்.......கிலாஃபத்திடம் பைஅத் செய்யும் நல்வாய்ப்பைப் பெற்ற நீங்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவீர்கள். ஆனால் அதற்கு இறையச்சமும் அவசியமாகும்.

இன்று நாம் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நூற்றாண்டு நிறைவடைவதைக் காணும் அதேவேளையில், அல்லாஹ்வின் அருள்களைக் கண்டவாறு, வெற்றி மற்றும் வாகையின் வடிவில் அஹ்மதிய்யா கிலாஃபத் முன்னேறிக் கொண்டே இருப்பதையும் பார்த்துக் கொண்டே செல்கிறோம்."

(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், ஆகஸ்ட் **22 - 25 2008,** பக்கம் **2,** தஅஸ்ஸூராத் கிலாஃபத்தே அஹ்மதிய்யா நூற்றாண்டு விழா சிறப்பிதழ் **2008** பக்கம் **180, 181**)

ஹுஸூர் அவர்கள் மேலும் கூறினார்கள்:

இன்று நான் உலகில் வாழும் அஹ்மதிகள் - அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சரி - முகங்களைப் பார்க்கின்ற போது, அதில் ஓர் ஒப்புமை இருப்பதைக் காண்கிறேன். அது அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இருக்கும் தூய்மையான நன்றியுணர்வின் வெளிப்பாடாகும். அவர் பாக்கிஸ்தானில் வாழும் அஹ்மதியானாலும், இந்தியாவில் வாழும் அஹ்மதியானாலும், இந்தோனேஷியா, அல்ஜீரியாவில் வாழும் அஹ்மதியானாலும், பங்களாதேஷில் வாழும் அஹ்மதியானாலும், ஆஸ்திரேலியாவில் வாழும் அஹ்மதியானாலும், ஐரோப்பாவில் வாழும் அஹ்மதியானாலும், அமெரிக்காவில் வாழும் அஹ்மதியானாலும் அல்லது ஆப்பிரிக்காவில் தொலை தூரத்தில் வாழும் அஹ்மதியானாலும் காலத்தின் கலீஃபாவைப் பார்த்ததுமே ஒரு சிறப்பான அன்பு, ஒரு சிறப்பான தொடர்பு, ஒரு சிறப்பான பொலிவு முகத்திலும் கண்களிலும் தென்படுகிறது. இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் செய்த

பைஅத் மற்றும் நன்றியுணர்வின் உண்மையான வெளிப்பாட்டினால் ஏற்பட்டதாகும். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடந்ததால் உருவான அன்பின் பிணைப்பால் ஏற்பட்டதாகும். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் முழு மனித குலத்திற்காகவும் இறைவன் புறமிருந்து இரட்சிப்பை வழங்குபவராக அனுப்பப்பட்டுள்ளார்கள் என்ற முழுமையான அறிவும் புரிதலும் இருப்பதனாலேயே ஆகும். மேலும் அஹ்மதிய்யா கிலாஃபத் அவர்களை அழைத்துச் செல்லும் ஒரு கயிறு ஆகும். ஏக இறைவனின் காலடிகளில் எல்லா நேரமும் சமர்ப்பனமாவது இந்த ஓரிறைமையின் அடையாளமாகும். **எனவே இப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தை இப்படிப்பட்ட உணர்வு கொண்ட ஆன்மாக்களை எந்த சமுதாயமாவது தோல்வியுறச் செய்ய முடியுமா? ஒருபோதும் முடியாது; ஒருபோதும் முடியாது.** இப்போது வெற்றிகளின் படித்தரங்களை கடந்து சென்று கொண்டு இருப்பதே அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு விதிக்கப்பட்டுள்ளது. மேலும் முழு உலகையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் ஒன்று சேர்க்க வேண்டும். இது இக்காலத்தின் இமாமுடன் இறைவன் செய்த வாக்குறுதியாகும். அவன் தனது வாக்குறுதியை ஒருபோதும் பொய்யாக்கி விடமாட்டான்.''

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல். **31** அக்டோபர் **- 7** நவம்பர் **2008** பக்கம் **12,** தஅஸ்ஸுராத் கிலாஃபத்தே அஹ்மதிய்யா நூற்றாண்டு விழா சிறப்பிதழ் **2008** பக்கம் **195**)

இது கிலாஃபத்தின் அருள்களைப் பற்றிய ஒரு தொகுப்பாகும். உண்மை என்னவென்றால், எல்லா அருள்களையும் சூழ்ந்து கொள்வது நம் அறிவுக்கு இயலாத காரியமாகும். எல்லா விபரங்களையும் எழுவதற்கு நமது எழுதுகோல் குறைபாடுள்ளதாக இருக்கிறது. ஆனால் நுபுவ்வத்திற்குப் பிறகு எல்லாவிதமான அருள்களும் (கிலாஃபத் என்ற) இந்த கயிற்றுடன் தொடர்புடையதாக உள்ளது. எல்லா நன்மையைப் பெறுவதும் இதனுடனுள்ள தொடர்பை சார்ந்தே உள்ளது. இதன் மூலமாகவே அருளைப் பெறுவது சாத்தியமாகும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்கள் நிபந்தனைக்கு உட்பட்டிருக்கின்றார்கள். கிலாஃபத்தின் அருள்களைப் பெறுவதற்கு கிலாஃபத்தின் அருள்களை நினைவில் கொள்வது அவசியமானதாகும் என்பதை தெளிவாக அறிந்து கொள்ளுங்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''அவர்கள் கிலாஃபத்தின் அருள்களை நினைவில் கொள்ள வேண்டும் என நான் அறிவுரை கூற விரும்புகிறேன். **ஒரு விஷயத்தை நினைவூட்டுவதற்காக பழைய சமுதாயங்களின் பழக்கம் என்னவெனில், அவர்கள் ஆண்டில் ஒருமுறை அதற்காக குறிப்பாக ஒருநாளைக் கொண்டாடுகின்றனர்.** உதாரணமாக, ஷியாக்களைப் பாருங்கள். அவர்கள் ஆண்டில் ஒருமுறை சமுதாயத்திற்கு ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத்தின் நாள் நினைவுக்கு வருவதற்காக துக்க நாளை கொண்டாடுகின்றனர். **அவ்வாறே நான் குத்தாமுக்கு அறிவுரை கூறுகிறேன்: அவர்கள் ஆண்டில் ஒருமுறை**

**கிலாஃபத் தினத்தை கொண்டாடட்டும். அதில் கிலாஃபத் நிலைநாட்டப்பட்டதில் இறைவனுக்கு நன்றி செலுத்தட்டும்.** தனது பழைய வரலாற்றை எடுத்துக் கூறட்டும். முன்னர் இறைவன் எனக்கு காட்டிய ருஃயாவையும், கஷ்ஃபையும் எடுத்துக் கூறட்டும். அவற்றை நிறைவேற்றி அதன் அருள்கள் இப்போதும் கிலாஃபத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றன என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளான்.''

(அல்ஃபஸ்ல் **1** மே **1957**)

## காலத்தின் கலீஃபாவின் மீது அன்பு வைப்பதும், அவர்களுக்குக் கட்டுப்படுவதும், நமது பொறுப்புகளும்

காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு கட்டளையையும் குறித்த நேரத்தில் செயல்படுத்துவதுதான் கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டிருப்பதற்கும், கலீஃபாவோடு நன்றியுணர்வுடனும், அன்புடனும் நடப்பதற்கு ஆதாரமாகும். அவருடைய ஒவ்வொரு குரலுக்கும் செவிசாய்ப்பதுமாகும். அவருடைய காலடியைப் பின்பற்றி நடந்தவாறு படித்தரங்களை கடப்பதாகும். இந்த இறை அமைப்பை மறுப்பவர்களையும், தனித்து சென்று விடுபவர்களையும், கட்டுப்படுவதிலிருந்து வெளியே சென்று விடுபவர்களையும் திருக்குர்ஆன் ஃபாஸிக் (தீயவர்கள்) என்று கூறியிருக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''காலத்தின் இமாமிடம் பைஅத் செய்யாத நிலையில் மரணித்தவர் அறிவீனத்தின் மரணத்தை அடைந்தார்.'' (முஸ்லிம். கிதாபுல் அமாரத்)

கலீஃபாவிடம் பைஅத் செய்து விட்டுப் பின்னர் அவருடைய கட்டளைகளின்படியும் அறிவுரைகளின்படியும் பைஅத் செய்தவர் செயல்படவில்லை என்றால் அவருடைய உதாரணம் மறுப்பவர்கள் அல்லது பைஅத் செய்யாதவர்களைப் போன்றதேயாகும். இன்னும் கூறுவதென்றால் அவர்களை விட அதிக பேறிழந்தவராக இருக்கிறார்; அவர்களை விட அதிகம் பிடிக்கப்படுபவராக இருக்கிறார்.

கிலாஃபத் மூலமாகவே ஜமாஅத் அமைப்பு உறுதி பெறுகிறது. ஏனெனில் ஜமாஅத் அமைப்பு கலீஃபாவினால் நிலைநாட்டப்பட்ட ஒன்றாகும். அது கட்டாயக் கடமைகளை எளிதில் நிறைவேற்றுவதற்காகவே அமையப்பெற்றுள்ளது. இந்த அமைப்புக்கு முழுமையாகக் கட்டுப்படுவதும் அவசியமாகும். இதனுடன் இணைந்திருப்பது கட்டாயமானதாகும். இதை விட்டு அகன்று கட்டுப்படுதல் நன்றியுணர்வு ஆகியவற்றில் பெருமை கொள்வது வீணான எண்ணமாகும். அது அல்லாஹ்வின் பார்வையில் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதன்று. மாறாக, தீமையான செயலாகும்.

கட்டுப்படுதலின் முதல் படி என்னவெனில், ஒரு நம்பிக்கையாளர் கலீஃபாவின் குரலைக் கேட்க வேண்டும். அவருடைய நாவிலிருந்து எப்போது என்ன வெளிப்படும் என்பதை தேடிக் கொண்டிருக்க வேண்டும். திருக்குர்ஆனில் நம்பிக்கை கொண்ட ஜமாஅத்தின் அடையாளமாக

سَمِعْنَا وَاَطَعْنَا

நாங்கள் செவியேற்றோம்; கட்டுப்பட்டோம் என்ற சொற்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள்

எப்போதும் நன்மையான விஷயங்களை கவனத்துடன் கேட்டு, புரிந்து கொண்டு அதனை நினைவில் கொள்கின்றனர். பிறகு அந்த விஷயங்களின்படி எப்போதும் செயல்படுகின்றனர். எவர் கேட்க மாட்டாரோ அவர் எவ்வாறு செயல்படுவார்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீஸில் வருகிறது:

أُوصِيكُمْ بِتَقْوَى اللهِ وَالسَّمْعِ وَالطَّاعَةِ

ஊஸீக்கும் பிதக்வல்லாஹி வஸ்ஸம்யி வத்தாஅத்தி. (திர்மிதி. கிதாபுல் ஈமான்)

அதாவது ''நான் உங்களுக்கு இறையச்சத்தை மேற்கொள்ளுமாறும் செவியேற்று கட்டுப்படுமாறும் வலியுறுத்திக் கூறுகிறேன்.''

இதிலிருந்து இறையச்சத்தைப் பெறுவதற்கு இரண்டு பெரிய ஏணிப்படிகள் இருக்கின்றன எனத் தெரிகிறது. காது கொடுத்து வழிகாட்டல்களைக் கேட்டல்; அவற்றின்படி செயல்படுதல். இதுவே கட்டுப்படுதல் ஆகும். பிறகு அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اِسْمَعُوْا وَاَطِيْعُوْا

இஸ்மவூ வஅதீவூ (புகாரி. கிதாபுல் அஹ்காம். பாபுஸ் ஸம்யி வத்தாஅதி) அதாவது கேளுங்கள்; கட்டுப்படுங்கள்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''கேளுங்கள்; கட்டுப்படுங்கள். காய்ந்த பேரித்தம் பழத்தை போன்று (சிறியதாக) இருக்கும்

தலையைக் கொண்ட ஹப்ஷி அடிமை உங்களுக்கு தலைவராக்கப்பட்டாலும் சரியே! ''

(ஸஹீஹ் புகாரி. கீதாபுல் அஹ்காம்)

ஹஸ்ரத் இப்னு உமர் அறிவிக்கிறார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன்: ''எவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதிலிருந்து கையை விலக்கிக் கொண்டாரோ அவர் (மறுமை நாளில்) தன்னிடம் எந்த சான்றும், சாக்குப் போக்கும் இல்லாத நிலையில் அல்லாஹ்வை சந்திப்பார். எவர் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்யாத நிலையில் மரணித்தாரோ அவர் அறிவீனத்தின், வழிகேட்டின் மரணத்தை அடைந்தார்.''

(ஸஹீஹ் முஸ்லிம். கிதாபு வஜூபி முலாஸிமத்தி ஜமாஅத்தில் முஸ்லிமீன்)

பிறகு இன்னொரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''வறுமை, செழிப்பு, மகிழ்ச்சி, துன்பம் மற்றும் உரிமை பறிக்கப்படும்போதும், உம்மை விடப்பிறருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்போதும் ஆகிய எல்லா நிலையிலும் நீங்கள் உங்கள் அதிகாரியின் கட்டளையை கேட்பதும், அவருக்குக் கட்டுப்படுவதும் கட்டாயமாகும்.''

(சஹீஹ் முஸ்லிம். கிதாபுல் அமாரத்)

பிறகு ஹஸ்ரத் உபாதா பின் வலீது தமது தந்தையின் வாயிலாக தமது பாட்டனாரின் அறிவிப்பை இவ்வாறு கூறுகிறார்கள்: ''நாங்கள் செவியேற்போம்; கட்டுப்படுவோம் என்ற நிபந்தனையின் படி நாங்கள்

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தோம். கடுமை, இனிமை, மகிழ்ச்சி, துக்கம், எங்களின் உரிமை கவனத்தில் கொள்ளப்படாவிட்டாலும் அதனை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் சண்டையிட மாட்டோம். தலைமைக்கு உரியவருடைய தலைமை விஷயத்தில் நாங்கள் சண்டையிட மாட்டோம். நாங்கள் எங்கு இருந்தாலும் உண்மையே பேசுவோம். அல்லாஹ்வின் வழியில் நாங்கள் எந்த பழித்துரைப்பவருக்கும் அஞ்ச மாட்டோம்.''

(சஹீஹ் முஸ்லிம். கிதாபுல் அமாரத். பாபு வஜூபி தாஅத்தில் உமராயி)

ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''கேட்பதும், கட்டுப்படுவதும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும் -அது அவருக்கு பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் சரியே. அவருக்கு பாவமான கட்டளை இட்டாலேயொழிய. அப்போது கட்டுப்பட வேண்டாம்.''

(சஹீஹ் புகாரி. கிதாபுல் அஹ்காமி. பாபுஸ் ஸம்யி வத்தாஅத்தில் இமாம்)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''எவர் எனக்குக் கட்டுப்பட்டாரோ அவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டார். எவர் எனக்கு மாறு செய்தாரோ அவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்தார். எவர் எனது அமீருக்குக் கட்டுப்பட்டாரோ அவர் எனக்குக் கட்டுப்பட்டார். எவர் எனது அமீருக்கு மாறு செய்தாரோ

அவர் எனக்கு மாறு செய்தார்.''
(சஹீஹ் முஸ்லிம். கிதாபுல் அமாரத். பாபு உஜூபித் தாஅத்தில் உமரா)

ஆக, ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவர் இறைவனால் நியமிக்கப்பட்டவர் அல்லது கலீஃபாக்களின் கட்டளைகளை கேட்பதும் பிறகு அதற்குக் கட்டுப்படுவதும் அதற்கேற்ப செயல்படுவதற்காக தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதும் அவருடைய சிறப்புப் பண்பாக இருக்க வேண்டும்.

கிலாஃபத், ஜமாஅத் அமைப்புக்கு கட்டுப்படுதல் மற்றும் நமது பொறுப்புகள் பற்றி கண்ணியமிக்க கலீஃபாக்களின் சில வழிகாட்டல்கள் வாசகர்களுக்காக எடுத்து வைக்கப்படுகின்றன. அவற்றால் இந்த கருத்துக்கு போதுமான தெளிவு கிடைக்கும். வபில்லாஹித் தவ்ஃபீக்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''இறைவன் மீண்டும் ஒருமுறை தன் அருளால் முஸ்லிம்களை உயிரூட்டுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் கிலாஃபத்தை நிலைநாட்டியுள்ளான். எனவே நான் எனது ஜமாஅத்திடம் கூறுவது என்னவென்றால், **நீங்கள் எப்போதும் உங்களை கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள். கிலாஃபத்தை நிலைபெறச் செய்வதற்காக தியாகங்களை செய்து கொண்டிருங்கள். நீங்கள் அவ்வாறு செய்தால் கிலாஃபத் உங்களிடம் எப்போதும் நிலைபெற்றிருக்கும்.** கிலாஃபத்தை நான் உங்களின் கையில்

கொடுத்து விட்டேன் என அவன் கூறுவதற்காகத்தான் அவன் கிலாஃபத்தை உங்கள் கையில் கொடுத்திருக்கிறான். நீங்கள் விரும்பினால் இது உங்களிடம் நிலைபெற்றிருக்கும். அல்லாஹ் விரும்பினால் அதை இல்ஹாமிய முறையிலும் அவன் நிலைநாட்ட முடியும். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. மாறாக, கிலாஃபத்தை நிலைநாட்ட நீங்கள் விரும்புவீர்கள் என்றால் நானும் அதை நிலைநாட்ட விரும்புவேன் எனக் கூறினான். ஆக, நீங்கள் கிலாஃபத்தை விரும்புகிறீர்களா இல்லையா என அவன் உங்களின் வாயினால் கூற வைத்திருக்கிறான். இப்போது நீங்கள் உங்கள் வாயை மூடிக்கொண்டிருந்தால் அல்லது கிலாஃபத்தின் தேர்தலில் போது தகுதியை கவனத்தில் கொள்ளவில்லை என்றால் நீங்கள் இந்த அருட்கொடையை இழந்து விடுவீர்கள்.

எனவே முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் பற்றி சிந்தியுங்கள். நீங்களாகவே மரணத்திற்கு இரையாவதிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுங்கள். உங்கள் அறிவு கூர்மையாக வேண்டும். உங்களிடம் தைரியம் மிகைத்து காணப்பட வேண்டும். நீங்கள் ஆற்றின் போக்கை மாற்றும் பாராங்கல்லாக ஆகி விடாதீர்கள். மாறாக தண்ணீரை எளிதாக கொண்டு செல்லும் ஊடகமாக நீங்கள் மாறுங்கள். நீங்கள் ஒரு சுரங்கம் ஆவீர்கள். அதன் பயன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகக் கிடைத்த இறையருளை எடுத்துச் சென்று கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு செய்வதில் நீங்கள் வெற்றி கண்டு விட்டால் ஒருபோதும் மரணிக்காத சமுதாயமாக நீங்கள் மாறி விடுவீர்கள். இந்த இறையருளின் வழியில்

நீங்கள் தடையாக இருக்கின்றீர்கள் என்றால், இந்த வழியில் கல்லாக மாறி நின்றால் அது உங்கள் சமுதாயத்தின் நாசத்திற்கான நேரமாகும். பிறகு உங்களின் ஆயுள் ஒருபோதும் நீண்டதாக இருக்காது. முந்தைய சமுதாயங்கள் மரணித்தது போன்று நீங்களும் மரணித்து விடுவீர்கள்.''

(தஃப்ஸீர் சூரத்துன் நமல். தஃப்ஸீரே கபீர் தொகுதி **7** பக்கம் **429 - 430**)

''உங்களுடைய கடமை என்னவெனில், உங்களுடைய காதுகளில் இறைவனுடைய தூதரின் குரல் எப்போது ஒலித்தாலும் நீங்கள் உடனே அதற்கு செவிமடுக்க வேண்டும். ஓடிச்சென்று அதனை நிறைவேற்ற வேண்டும். அதிலேயே உங்களின் முன்னேற்றத்திற்கான இரகசியம் அடங்கியிருக்கிறது. இன்னும் கூறுவதென்றால், அந்த நேரத்தில் மனிதன் தொழுது கொண்டிருந்தாலும் சரி, அப்போதும் அவர் தொழுகையை விட்டு விட்டு இறைவனின் தூதரின் குரலுக்கு பதிலளிக்க வேண்டியது கடமையாகும். இதே கட்டளை தனது அந்தஸ்திற்கேற்ப இறைதூதரின் கலீஃபாவுக்கும் பொருந்துகிறது. அவருடைய குரலுக்கு ஒன்றிணைவது அவசியமானதாகும்.''

(மன்ஸபே கிலாஃபத் சொற்பொழிவு. சான்று: நிஸாமே கிலாஃபத் கி பரகாத் அவ்ர் ஹமாரீ ஸிம்மதாரியான், பக்கம் **42**)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

**''எந்த ஜமாஅத்துகள் கட்டுக்கோப்புடன் இருக்கின்றனவோ அவற்றின் மீது சில பொறுப்புகளும்**

**இருக்கின்றன. அவை இல்லாமல் அவற்றின் பணி சரியான முறையில் நிறைவேறாது**............அந்த நிபந்தனைகள் மற்றும் பொறுப்புகளில் ஒரு முக்கியமான பொறுப்பு, அது ஓர் இமாமின் கையில் பைஅத் செய்திருக்கும்போது **இமாமின் நாவிலிருந்து எத்தகைய கருத்துக்கள் வருகின்றன என்று அவருடைய வாயை நோக்கி பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அவர் காலெடுத்து வைத்த பிறகு காலெடுத்து வைக்க வேண்டும்**...... கட்டளை இடுவது இமாம் என்றால், கட்டுப்படுவது இமாமை பின்பற்றுபவரது கடமையாகும்.''

(அல்ஃபஸ்ல் **5** ஜூன் **1937.** சான்று: நிஸாமே கிலாஃபத் கி பரகாத் அவ்ர் ஹமாரீ ஸிம்மதாரியான் பக்கம் **42, 43**)

''கிலாஃபத் அல்லாஹ்வின் கயிறு ஆகும். எத்தகைய கயிறு என்றால் அதைப் பிடித்துத்தான் நீங்கள் முன்னேற முடியும். எவர் அதை விட்டுவிடுவாரோ அவர் அழிந்து போவார் என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள்.''

(தர்ஸுல் குர்ஆன். **1** மார்ச் **1912.** சான்று: தர்ஸுல் குர்ஆன் பக்கம் **67 - 84,** காதியான் பதிப்பு **1912**)

''கிலாஃபத் இஸ்லாத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும் என்பது நமது கொள்கையாகும். எவர் அதை மீறி செயல்படுவாரோ அவர் இஸ்லாத்தின் வரம்பை மீறி செயல்படுகிறார். நமது இக்கொள்கை சரியானது என்றால் இதனை ஏற்றுக்கொள்பவர்களுக்கு,

اَلْاِمَامُ جُنَّةٌ يُقَاتَلُ مِنْ وَّرَائِهٖ

இமாம் கேடயமாக இருக்கிறார்; அவரின் பின்னால் இருந்து போரிடப்படுகிறது என்ற கட்டளை மிகவும்

முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கிலாஃபத்தின் நோக்கம் முஸ்லிம்களின் எண்ணத்திலும், செயலிலும் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதே. கலீஃபாவின் வழிகாட்டல்களின்படி முழுமையாக செயல்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும். கிலாஃபத்தின் மூலமாக செயல் அளவில் ஒற்றுமையும் சிந்தனை அளவில் ஒற்றுமையும் உருவாக்கப்பட முடியும். தொழுகையில் இமாம் ருகூவில் செல்லும்போது ருகூ செய்வதும், நிற்கும்போது நிற்பதும், ஸஜ்தா செய்யும்போது ஸஜ்தா செய்வதும் போன்றே காலத்தின் கலீஃபாவின் சைகையின் கீழ் முழு ஜமாஅத்தும் செல்ல வேண்டும். அவருடைய கட்டளைக்கு முன்னால் செல்வதற்கு முயற்சி செய்யக் கூடாது. தொழுகைக்கான இமாம் சில மனிதர்களுக்கு மட்டுமே இமாமாக இருக்கிறார். இமாமைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் எவர் ருகூ, ஸஜ்தாவிற்கு இமாம் செல்வதற்கு முன்னர் தாம் சென்று விடுகின்றாரோ அல்லது அவர் தலையை உயர்த்துவதற்கு முன் உயர்த்தி விடுகின்றாரோ அவர் பாவியாவார் என்று கூறியிருக்கின்றார்கள். அப்படி இருக்கும்போது எவர் முழு சமுதாயத்திற்கும் இமாமாக இருக்கின்றாரோ எவருடைய கையில் அனைவரும் பைஅத் செய்திருக்கின்றார்களோ அவருக்குக் கட்டுப்படுவது எவ்வளவு அத்தியாவசியமான செயல் என்று எண்ணிப்பார்தீர்களா?.........எனவே இதே போன்று நீங்கள் அனைவரும் இமாமின் சைகையினைப் பின்பற்றிச் செல்லுங்கள். அவருடைய வழிகாட்டலிலிருந்து சிறிதும் இங்குமங்கும் விலகிச் செல்லாதீர்கள். அவர் கட்டளையிடும்போது முன்னேறுங்கள். அவர்

கட்டளையிடும்போது நின்று விடுங்கள். எங்கு முன்னேறுவதற்கு அவர் கட்டளையிடுகின்றாரோ அங்கு முன்னேறுங்கள். எங்கிருந்து விலகுவதற்கு அவர் கட்டளை இடுகின்றாரோ அங்கிருந்து விலகி விடுங்கள்.'' (அன்வாருல் ஊலூம் தொகுதி **14** பக்கம் **515 - 516.** கியாமே அம்ன் அவ்ர் கானூன் கீ பாபந்தி கே முதஅல்லிக் ஜமாஅத்தே அஹ்மதிய்யா கா ஃபர்ஸ்)

மேலும் அவர்கள் கூறுகிறார்கள்:

''மரத்துடன் இருக்கும் கிளைதான் கனியைத் தர முடியும். மரத்திலிருந்து வெட்டப்பட்டு கிடக்கும் கிளையால் கனியை உருவாக்க முடியாது. அவ்வாறே தன்னை இமாமுடன் தொடர்புபடுத்தியபடி இருப்பவரே இயக்கத்திற்கு பயனுள்ள பணியைச் செய்ய முடியும். ஒருவர் இமாமுடன் தன்னை தொடர்பு கொண்டவராக ஆக்காவிட்டால் அவர் உலக அறிவைப் பெற்றவராக இருப்பினும் அவர் ஆட்டுக் குட்டி செய்யும் வேலையைக் கூட செய்ய முடியாது. எனவே நீங்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் உலகில் வெற்றி காண வேண்டுமென்றால் உங்களுக்கு எனது அறிவுரை என்னவெனில், எனது தூதுச்செய்தி என்னவெனில், நீங்கள் கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டவர்களாக இருங்கள். அல்லாஹ்வின் இந்தக் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நமது எல்லா முன்னேற்றங்களின் அடிப்படை கிலாஃபத்தோடு இணைந்திருப்பதில்தான் மறைந்திருக்கிறது.'' (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் **23 - 30** மே **2003** பக்கம் **1**)

''எந்த ஜமாஅத்துகள் கட்டுக்கோப்புடன் இருக்கின்றனவோ அவற்றின் மீது சில பொறுப்புகள்

இருக்கின்றன. மேலும் சில நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவது அவர்களின் மீது கடமையாகும். அவை இல்லாமல் அவற்றின் வேலை சரியான முறையில் நடக்க முடியாது....................அந்த நிபந்தனைகள் மற்றும் பொறுப்புகளில் ஒரு முக்கியமான பொறுப்பு, அவர்கள் ஓர் இமாமின் கையில் பைஅத் செய்திருக்கும்போது, அவருக்கு கட்டுப்படுவதற்கு ஒப்புக்கொண்டிருக்கும்போது இமாம் என்ன கூறுகிறார் என்று அவருடைய வாயை நோக்கி பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அவர் காலெடுத்து வைத்த பிறகு காலெடுத்து வைக்க வேண்டும். முழு ஜமாஅத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் பணிகளில் அவர்கள் ஒருபோதும் பங்கெடுக்கக்கூடாது...... கட்டளை இடுவது இமாமின் அந்தஸ்தாகும்; இமாமை பின்பற்றுபவரது அந்தஸ்து அவர் கட்டுப்படுவதாகும்.''

(அல்ஃபஸ்ல் **5** ஜூன் **1937.** பக்கம் **1, 2**)

மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

''கலீஃபா ஆசிரியர் ஆவார்; ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் மாணவர் ஆவார். எந்த சொல் கலீஃபாவின் வாயிலிருந்து வந்தாலும் அதன்படி செயல்படாமல் விட்டு விடக் கூடாது.''

(அல்ஃபஸ்ல் **2** மார்ச் **1946**)

''நண்பர்களே! விழித்தெழுங்கள். உங்கள் அந்தஸ்தைப் புரிந்து கொள்ளுங்கள். உலகின் மேற்பரப்பில் வேறு எங்கும் காணக்கிடைக்காத கட்டுப்படுதலின் அத்தகைய முன்மாதிரியைக் காட்டுங்கள். குறைந்தது இனிவரும் காலத்தில் நூற்றுக்கு நூறு பேரும் முழுமையான

கட்டுப்படுதலுக்கான முன்மாதிரியைக் காட்டுவதற்கு முயற்சி செய்யுங்கள். இறைவன் உங்களுடைய பாதுகாப்புக்காக நியமித்துள்ள அந்த கேடயத்திலிருந்து எவருடைய உடலும் வெளியே இருக்கக் கூடாது.

اَلْاِمَامُ جُنَّةٌ يُقَاتَلُ مِنْ وَّرَائِهٖ

(இமாம் கேடயம் ஆவார்; அவருக்குப் பின்னால் நின்று போர் செய்யப்படுகிறது) என்ற நபிமொழியின்படி முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஆன்மா உங்களால் மகிழ்ச்சி அடையும் வகையில் செயல்படுங்கள்.''

(அன்வாருல் உலூம். தொகுதி **14** பக்கம் **525**)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

**''கிலாஃபத் என்பதன் பொருளே, எந்த நேரத்தில் காலத்தின் கலீஃபாவின் நாவிலிருந்து ஒரு சொல் வெளிவருகிறதோ அப்போது எல்லா திட்டங்களையும், எல்லா ஆலோசனைகளையும், எல்லா செயல்முறைகளையும் வீசி எறிந்து விட வேண்டும் என்பதுதான். இப்போது காலத்தின் கலீஃபாவிடமிருந்து கட்டளையாகக் கிடைத்த இந்த திட்டம்தான், இந்த ஆலோசனைதான், இந்த செயல்முறைதான் பயனுள்ளது எனக் கருத வேண்டும்.** இந்த ஆன்மா ஜமாஅத்தில் உருவாகாத வரை எல்லா குத்பாக்களும், எல்லா சொற்பொழிவுகளும் வீணானவையாகும். எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்தவையாகும்.''

(ஜுமுஆ குத்பா **24.1.1936** அல்ஃபஸ்ல் **31.1.1936** பக்கம் **9**)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

''இமாம் மற்றும் கலீஃபாவின் தேவை என்னவெனில், நம்பிக்கை கொண்டவர் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் அவரைப் பின் தொடர்ந்தே எடுத்து வைக்கிறார். தனது ஆசை, விருப்பங்களை அவரது ஆசை, விருப்பங்களின் கீழ் வைக்கின்றார். தனது எண்ணங்களை அவரது எண்ணங்களின் கீழ் வைக்கிறார். தனது எதிர்பார்ப்புகளை அவரது எதிர்பார்ப்புகளின் கீழ் வைக்கிறார். தமது வசதிவாய்ப்புகளை அவரது வசதிவாய்ப்புகளின் கீழ் வைக்கிறார். இந்த அந்தஸ்தை நம்பிக்கையாளர் அடைந்து விட்டால் அவருக்கு வெற்றியும் முன்னேற்றமும் உறுதியானதாகும்.''

(அல்ஃபஸ்ல் **4** செப்டம்பர் **1937.** நிஸாமே கிலாஃபத் கீ பரகாத் அவ்ர் ஹமாரீ ஸிம்மதாரியான் பக்கம் **44, 45**)

இன்னோரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

''ஈமான் என்பது இறைவனால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியின் நாவிலிருந்து என்ன ஓசை வெளி வந்தாலும் அதற்கு செவிசாய்ப்பதற்கும் அதற்குக் கட்டுப்படுவதற்கும் பெயர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.''

(அல்ஃபஸ்ல் **15,** செப்டம்பர் **1994.** நிஸாமே கிலாஃபத் கீ பரகாத் அவ்ர் ஹமாரீ ஸிம்மதாரியான் பக்கம் **4**)

மற்றோரிடத்தில் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

**''ஒருவர் நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஈமான் கொள்கிறேன் என்று**

**ஆயிரம் முறை கூறினாலும், நான் அஹ்மதிய்யத்தின் மீது ஈமான் கொள்கிறேன் என்று ஆயிரம் முறை கூறினாலும் எவர் மூலமாக இறைவன் இக்காலத்தில் இஸ்லாத்தை நிலைநாட்ட விரும்புகிறானோ அவருடைய கையில் தனது கையை கொடுக்காத வரை இறைவனிடத்தில் அந்த வாதங்களுக்கு எந்த மதிப்புமில்லை........**ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் தம்மை மாய்த்துக் கொண்டவர்களைப் போன்று அவருக்குக் கட்டுப்படாத வரை - அவருக்குக் கட்டுப்படுவதில் தமது வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் செலவிடாத வரை - அவர் எவ்வித சிறப்புக்கும் பெருமைக்கும் உரியவராக மாட்டார்.''

(அல்ஃபஸ்ல் **15**, நவம்பர் **1946**)

**மற்றோரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

**''நான் நபி இல்லைதான்; ஆயினும் நான் நுபுவ்வத்தின் காலடியில் அதன் இடத்தில் நிற்கின்றேன். எனக்குக் கட்டுப்படுவதிலிருந்து வெளியே செல்லும் ஒவ்வொரு நபரும் நிச்சயமாக நபிக்குக் கட்டுப்படுவதிலிருந்து வெளியே சென்று விடுகிறார்........**எனக்குக் கட்டுப்படுதல் என்பதில் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுதல் என்பது அடங்கியிருக்கிறது.'' (அல்ஃபஸ்ல் **4**, செப்டம்பர் **1937**)

''இறைவன் மற்றும் அவனது தூதருக்குக் கட்டுப்படாதவர் குற்றவாளியாக இருப்பதைப் போன்றே கலீஃபா எந்த விஷயத்திற்கு கட்டளை இடுகின்றாரோ அதற்குக் கட்டுப்படாதவர் குற்றவாளியாவார். (கட்டுப்படாதவராக இருக்கும்) அவருக்கென்று ஷரீஅத் எந்த தண்டனையையும் நியமிக்கவில்லை. ஆயினும் நம்பிக்கை

கொண்டவர்களின் பார்வையில் கட்டுப்படாமை என்பதே தன்னளவில் ஒரு தண்டனையாக இருக்கிறது. கலீஃபாவின் கட்டளையை ஏற்கவில்லை என்ற உணர்வே தன்னளவில் ஒரு தண்டனையாகும். இதுதான் உண்மையான தண்டனையாகும். மற்ற தண்டனைகள் சீர்திருத்தத்திற்காக கொடுக்கப்படுகின்றன. மற்றபடி அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட ஜமாஅத்திற்கும் கலீஃபாவுக்கும் கட்டுப்படாமல் இருப்பதை விட பெரிய தண்டனை வேறு என்ன இருக்க முடியும்? இறைவன் மற்றும் அவனது தூதரின் கோபம் என்பதே மிகப் பெரிய தண்டனையாகும். நரக தண்டனை என்பதன் பொருளே அல்லாஹ் கோபமாக இருக்கிறான் என்பதுதான். எனவே அமீர்களுக்கு கட்டுப்படாததற்கு தண்டனை இல்லை என்றாலும் அவை கட்டளைகளிலேயே இருக்கின்றன.''

(ரிப்போர்ட் மஜ்லிஸே முஷாவரத் **1942** பக்கம் **25,** கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத் தொகுதி **3** பக்கம் **558**)

''பிறகு இறைவன் தன் அருளால் முஸ்லிம்களை மீண்டும் உயிரூட்டுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத்தை நிலைநாட்டினான். எனவே நான் எனது ஜமாஅத்திடம், நீங்கள் எப்போதும் உங்களை கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டவர்களாக வையுங்கள். கிலாஃபத்தை நிலைநாட்டுவதற்காக தியாகங்களை செய்து கொண்டிருப்பது உங்களின் பணியாகும். நீங்கள் அப்படி செய்தால் கிலாஃபத் உங்களிடம் நிலைபெறும் என்று நான் கூறுகிறேன்.''

(தப்ஸீரே கபீர் தொகுதி **7** பக்கம் **430,** கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத் தொகுதி **3** பக்கம் **478**)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறுகிறார்கள்:

“.....கலீஃபாவை இறைவன் உருவாக்குகிறான். தானே, அவர்களின் அச்சங்களை நீக்குகின்றான். எவர் மற்றவர்களின் திருப்திக்கேற்ப எல்லா நேரமும் ஒரு பணியாளரைப் போன்று பணியாற்றுவாரோ அவரிடம் என்ன அச்சம் இருக்க முடியும்? அவரிடம் ஏகத்துவக் கொள்கையின் என்ன அம்சம் இருக்கிறது? ஆனால் கலீஃபாக்களுக்கு அவசியம் என்னவென்றால், இறைவனே அவர்களை உருவாக்குகிறான். அவர்களின் அச்சத்தை நிம்மதியாக மாற்றுகிறான். அவர்கள் இறைவனையே வணங்குகின்றனர்; அவர்கள் இணை வைப்பதில்லை. **நபியையும் ஒருவர் கூட ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவரது நுபுவ்வத்தில் எந்த மாற்றமும் வந்து விடாது. அவர் நபியாகவே இருப்பார். இதே நிலைதான் கலீஃபாவுக்கும். அவரை அனைவரும் விட்டு விட்டாலும் அவர் கலீஃபாவாகவே இருப்பார்.** ஏனெனில் அசலுக்கு இருக்கும் கட்டளைதான் கிளைக்கும் உள்ளது. எவர் ஆட்சிக்காக கலீஃபாவாகின்றாரோ அவர் பொய்யர் ஆவார். சீர்திருத்தத்திற்காக இறைவன் புறமிருந்து பணி செய்கிறார் என்றால் முழு உலகமும் அவருக்கு எதிராக இருந்தாலும் அவர் இறைவனின் நேசத்திற்குரியவராவார்.”

(மன்ஸபே கிலாஃபத். அன்வாருல் உலூம் தொகுதி 2 பக்கம் 53, 54)

(குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 2 பக்கம் 201 - 202 காதியான் பதிப்பு 2005)

“......அல்லாஹ்வின் இந்த மகத்தான அருட்கொடைக்கு மதிப்பளிப்பதும் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவதும் உங்களின் கடமையாகும். காலத்தின் கலீஃபாவுடனும் ஜமாஅத் அமைப்புடனும் அன்போடும் கட்டுப்படுதலோடும் அறுந்து விடாததுமான உறவை உருவாக்குங்கள். இதுவே உங்களின் தனித்தன்மையாக இருக்க வேண்டும். நன்மை, இறையச்சம், கலப்பற்றதன்மை, கட்டுப்படுதல் ஆகியவற்றில் அத்தகைய மகத்தான முன்மாதிரியாக அல்லாஹ் உங்களை ஆக்குவானாக.......நீங்கள் இறையச்சத்தில் நிலைபெற்று விட்டால், உங்களுக்கு காலத்தின் கலீஃபாவுடன் அன்பு, நன்றியுணர்வு ஆகிய தொடர்பு இருக்குமென்றால் ஜமாஅத் அமைப்பு மற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்துக்குக் கட்டுப்படுவதும் கண்ணியமளிப்பதும் உங்களின் உள்ளங்களில் அலைமோதுமென்றால் அல்லாஹ் திருக்குர்ஆனில் நம்பிக்கை கொண்ட தனது அடியார்களுக்கு வாக்குறுதி வழங்கிய அந்த நிரந்தரமான அருட்கொடைகளுக்கு எப்போதும் உரிமையுடையவர்கள் ஆகிக் கொண்டே செல்வீர்கள். அதன் அருளால் உங்களின் மார்க்கமும் உலகமும் சீரமைந்து கொண்டே செல்லும். உங்களுக்கு உறுதித்தன்மையும் உருவாகும். அதன் அருளால் இறைவன் எப்போதும் உங்கள் அச்சத்தை அமைதியாக மாற்றிக் கொண்டே செல்வான். ஆனால் இதற்கு இறைவணக்கமும் நற்செயலும் நிபந்தனையாகும். அவற்றை முன்னிறுத்துங்கள். காலத்தின் கலீஃபாவின் குரலுக்கு செவிசாய்ப்பதற்கு எப்போதும் ஆயத்தமாக இருங்கள். அப்போது வெற்றி உங்கள் கால்களை

முத்தமிடும். இம்மை, மறுமையின் முன்னேற்றங்கள் உங்களுக்கு வழங்கப்படும் - இன்ஷாஅல்லாஹ். அல்லாஹ் உங்களுக்கு எனது இந்த அறிவுரைகளின்படி செயல்படும் நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும் நீங்கள் உண்மையான முறையில் இந்தப் புனித நகருக்கான உரிமையை நிறைவேற்றுபவர்களாக ஆகுங்கள். ஆமீன்.''
(ரிஸாலா அன்சாருல்லாஹ் காதியான், கிலாஃபத்தே அஹ்மதிய்யா நூற்றாண்டு விழா சிறப்பிதழ் **2008** பக்கம் **29**)

''........இறைவனுக்காக உங்களுக்கு கிலாஃபத்துடன் அன்பு இருக்கிறது என்ற உங்கள் வாதம் உண்மை என்றால், பிறகு கிலாஃபத் அமைப்பின் ஒரு பகுதியாக இருக்கின்ற ஜமாஅத் அமைப்புக்கும் முழுமையாகக் கட்டுப்படுங்கள்.''

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் **15** ஜூலை **2005**)

''ஜமாஅத் அமைப்புக்கும், பொறுப்பாளர்களுக்கும் கட்டுப்படுவதிலும், அவர்களின் கட்டளைகளை, அவர்களின் தீர்ப்புகளை ஏற்றுக் கொள்வதிலும்தான் அல்லாஹ் மற்றும் இறைதூதருக்குக் கட்டுப்படுதல் என்பது இருக்கிறது. அந்தத் தீர்ப்பு தவறானவை என்றால் அல்லாஹ் உங்களுக்கு பொறுமைக்கான நற்கூலியை வழங்குவான். ஏனெனில் நீங்கள் மறுமை நாளின் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள் என்றால் விவகாரத்தை அல்லாஹ்விடம் விட்டு விடுங்கள். நீங்கள் உங்கள் முரண்பட்ட கருத்தில் அடம்பிடிப்பதற்கு உங்களுக்கு அதிகாரமில்லை. உங்களின் வேலை கட்டுப்படுதல் மட்டுமே ஆகும்; கட்டுப்படுதல் மட்டுமே ஆகும்; கட்டுப்படுதல்

மட்டுமே ஆகும்.'' (குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி **1** பக்கம் **258 - 266**)

''இப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரின் ஊழியத்திலும் கிலாஃபத்துக்கு கட்டுப்படுவதிலும்தான் அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பதற்கான வழிகள் இருக்கின்றன. இதைத் தவிர வேறு எந்த வழியுமில்லை. அல்லாஹ் எல்லா அஹ்மதிகளுக்கும் இதை புரிவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக........நாம் கூடிய விரைவில் உலகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை ஏற்றி, இஸ்லாத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்காக இந்த கலப்பற்றதன்மை, நன்றியுணர்வு, கட்டுப்படுதல் ஆகியவற்றுடன் நம் தொடர்பை அதிகமாக்கிக் கொண்டே செல்வோம்.''

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் **12-18** ஜூன்,**2015** பக்கம் **10**)

''உங்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இணைத்த பிறகு நீங்கள் கிலாஃபத்துக்கு முழுமையாக கட்டுப்பட வேண்டிய தேவை மிக அதிகமாக இருக்கிறது. இதுதான் ஜமாஅத்தின் உறுதிப்பாட்டிற்கும் ஆன்மீகத்தின் முன்னேற்றத்திற்கும் காரணமாக அமையும். கலீஃபாவின் ஒவ்வொரு தீர்ப்பையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் அளவிலும் எவ்விதமான தடையும் உள்ளத்தில் உருவாகாதிருப்பதும் எந்த விஷயத்தைக் கேட்டும் உள்ளத்தில் இறுக்கம் ஏற்படாதிருக்கும் அளவிலும் கிலாஃபத்தைப் பற்றிய ஞானமும் அது குறித்த அறிவும், புரிந்து கொள்ளும் திறனும் ஜமாஅத்தில் உருவாக வேண்டும்....... எந்நிலையிலும் காலத்தின் கலீஃபாவுக்குக்கு கட்டுப்படுவதும்

அமைப்புக்குக் கட்டுப்படுவதும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஒவ்வொருவரும் இதன் முக்கியத்துவத்தை உணர வேண்டும்.''

(ஜுமுஆ குத்பா **31** ஜனவரி **2014.** அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் **12 - 18** ஜூன் **2015** பக்கம் **10**)

''ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் முழுமையாகக் கட்டுப்படுவது அவசியமாகும். ஒவ்வொருவரும் முழுமையாகக் கட்டுப்பட்டால் ஆன்மீக உயர்வுகளின் பக்கம் நமது காலடிகள் முன்னேறும் - இன்ஷா அல்லாஹ்.''

(ஜுமுஆ பேருரை **6** ஜூன் **2014,** அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் **12 - 18** ஜூன் **2015** பக்கம் **11**)

**''உள்ளத்தில் ஒளி உருவாகிறதா? கட்டுப்படுவதனால் ஆன்மாவில் இன்பம், ஒளி கிடைக்கிறதா? என்பதே ஒவ்வொருவரும் தனது கட்டுப்படும் பண்பை அளப்பதற்கான அளவுகோல் ஆகும்.** ஒவ்வொருவரும் இது தொடர்பாக சிந்தித்தால் அவரே தனது கட்டுப்படுதலின் தரம் எந்த அளவுக்கு இருக்கிறது? எந்த அளவுக்கு அவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுகிறார்? எந்த அளவுக்கு அவர் இறைதூதருக்குக் கட்டுப்படுகிறார்? எந்த அளவுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக நிலைநாட்டப்பட்ட கிலாஃபத் அமைப்புக்குக் கட்டுப்படுகிறார்? என்பதை அறிந்து கொள்வார், புரிந்து கொள்வார். **அல்லாஹ் மற்றும் இறைதூதரின் கட்டுப்படுதலுக்குப் பிறகு எந்த ஒளியும் கிடைக்கவில்லை என்றால் அதற்கு எந்த பயனுமில்லை என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.** உலகின் ஆட்சிக்குக்

கட்டுப்படுவதால் அமைதியும் நிம்மதியும் கிடைக்குமென்றாலும் ஆன்மீக ஒளியும் இன்பமும் ஆன்மீக கட்டுப்படுதலில்தான் கிடைக்கிறது.''

(குத்பா ஜுமுஆ **5.12.2014.** அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் **12 - 18** ஜூன் **2015** பக்கம் **11**)

**''.......அமீர்மார்களும், தலைவர்களும், பொறுப்பாளர்களும், கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களும் காலத்தின் கலீஃபாவால் நியமிக்கப்பட்ட கட்டமைப்பின் ஒரு அங்கமாகும். இந்த அடிப்படையில் அவர்கள் காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதியாவார்கள். எனவே தமது பணிகளை, தமது கடமைகளை** நிறைவேற்றுவதில் அவர்களின் சிந்தனை காலத்தின் கலீஃபாவின் சிந்தனையைப் போன்று இருக்க வேண்டும். **தலைமையகத்திலிருந்து வழங்கப்படும் வழிகாட்டல்களின்படியே செயல்பட வேண்டும். இவ்வாறு நீங்கள் நடக்கவில்லை என்றால் பிறகு நீங்கள் உங்கள் பொறுப்பிற்கான உரிமையை நிறைவேற்றவில்லை. அதன் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை.''**

(குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி **2** பக்கம் **951**)

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஷூரா பிரதிநிதிகள் மற்றும் மற்ற பணியாளர்களுக்கு காலத்தின் கலீஃபாவுக்குக் கட்டுப்படுவதன் பக்கம் கவனமூட்டியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

**''.......ஷூராவின் தீர்மானங்களின் மீது செயல்பட வைப்பது ஷூராவின் பிரதிநிதிகள் மற்றும் பொறுப்பாளர்களின் பணியாகும். ஏனெனில் இந்த**

**தீர்மானங்கள் காலத்தின் கலீஃபாவினால் ஒப்புக்கொள்ளப்பட்டவையாக இருக்கின்றன. எனவே அவற்றின்படி செயல்பட வைப்பதன் பக்கம் முழுமையான முறையில் கவனம் செலுத்தவில்லை என்றால் காலத்தின் கலீஃபாவின் தீர்ப்பை நீங்கள் உணர்வற்ற முறையில், அற்பமாக பார்க்கின்றீர்கள்.** அதன் பொருள், கட்டுப்படுதல் என்ற வட்டத்திற்குள் நீங்கள் இல்லை. எவர்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளனவோ அவர்கள், மற்றவர்கள் பின்பற்றத் தகுந்த உயர்ந்த முன்மாதிரியைக் காட்ட வேண்டும். **எனவே தொண்டு செய்வதற்காகக் கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பம் நமக்கு மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்; மிகவும் கண்ணியத்திற்குரிய விஷயமாகும் என நினைத்து இதனை வெறும் கண்ணியம், மகிழ்ச்சிக்கான தருணமாக மட்டும் கருதாமல், இறையச்சத்தின் உயர்வான தரம் நிலைநாட்டப்படும்போதுதான் இது கண்ணியத்திற்கும் மகிழ்ச்சிக்கும் உரிய விஷயமாக இருக்கும்.** அப்போது இது கண்ணியத்திற்கும் மகிழ்ச்சிக்கும் உரிய அந்தஸ்தாக இருக்கும்..........அல்லாஹ் அனைவரையும் இறையச்சத்தின் வழிகளில் நடத்தியவாறு உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றும் நல்வாய்ப்பை வழங்குவானாக. எவர்களுக்கு ஏதாவதொரு வகையில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அவர்கள் அனைவரும் காலத்தின் கலீஃபாவுக்கு உதவி புரியும் கரமாக இருங்கள்.''

(குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி **4** பக்கம் **165, 166** காதியான் பதிப்பு **2005**)

கலீஃபாவின் அமைப்புக்கு முழுமையாகக் கட்டுப்படுவதற்கு ஜமாஅத் சகோதரர்கள் ஷூரா அமைப்பின் பயனைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். மஜ்லிஸே ஷூராவில் ஜமாஅத்தின் முன்னேற்றங்களுக்காக என்ன திட்டங்களை பிரதிநிதிகளின் மூலமாக காலத்தின் கலீஃபாவுக்கு அனுப்புவீர்களோ அவை எல்லா வகையிலும் ஜமாஅத் மற்றும் அமைப்புக்கு பொருத்தமானவையாகவும் பயனுள்ளவையாகவும் இருக்க வேண்டும். பிறகு செயல் அளவில் அந்த திட்டங்களுக்கேற்ப செயல்முறைப் படுத்த வேண்டும். காலத்தின் கலீஃபாவுக்கு இவ்விதமாக முழுமையாக கட்டுப்பட வேண்டும். இது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் மஜ்லிஸே ஷூரா உறுப்பினர்களுக்கு தமது அந்தஸ்தைப் புரியுமாறும் காலத்தின் கலீஃபாவுக்குக் கட்டுப்படுமாறும் அறிவுறுத்தியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

''ஜமாஅத் விவகாரங்களில் ஆலோசனை கூறுங்கள் என்று காலத்தின் கலீஃபாவின் சார்பாக, ஜமாஅத் சார்பாக அழைக்கப்படும்போது எந்த அளவுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பாருங்கள். மஜ்லிஸே ஷூராவில் ஆலோசனைக்காக நீங்கள் அழைக்கப்படும்போதெல்லாம் ஒரு பெரும் பொறுப்பு மஜ்லிஸே ஷூராவின் மீது சுமத்தப்படுகிறது. ஷூரா உறுப்பினர்களின் மீது சுமத்தப்படுகிறது. அவர் ஒரு தூய அமைப்பின் உறுப்பினராக்கப்படுகிறார். **ஏனெனில் ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பிற்குப் பிறகு இரண்டாவது முக்கியமான தூய அமைப்பு ஷூரா அமைப்பே ஆகும்.** எனவே காலத்தின் கலீஃபா இதற்காக அழைக்கும்போது,

ஜமாஅத் உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்வு செய்து, செல்லுங்கள்; அல்லாஹ்வின் போதனையை உலகில் பரப்புவதற்காகவும், ஜமாஅத் சகோதரர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் தர்பிய்யத் பற்றிய விஷயங்களுக்கு தீர்வு காணவும், மனித இனத்திற்கு தொண்டு செய்யவும் ஆலோசனை செய்ய காலத்தின் கலீஃபா அழைத்திருக்கிறார். அவருக்கு ஆலோசனை கூறுங்கள் என்று அனுப்பி வைக்கும்போது எந்த அளவுக்கு பொறுப்பு அதிகமாகி விடுகிறது! **இந்த சிந்தனையுடன் மஜ்லிஸே ஷூராவில் நீங்கள் அமர்ந்தால் மஜ்லிஸே ஷூராவின் முழு நிகழ்ச்சிகளையும் கேட்பது, பாவமன்னிப்புத் தேடுவது, சலவாத் ஓதுவது ஆகியவற்றைத் தவிர வேறு எந்த சிந்தனையும் வரவே முடியாது.** இந்த சிந்தனையுடன் மஜ்லிஸே ஷூராவில் நீங்கள் அமர்ந்தால், ஆலோசனை கூறுவதற்காக உங்களை எப்போது நிறுத்தினாலும் சரியான, முழுமையான பொறுப்புடன் கருத்து கூற முடியும். ஏனெனில் அந்த கருத்துக்கள் காலத்தின் கலீஃபாவுக்கு சென்று சேர வேண்டியவையாக இருக்கின்றன. மேலும் ஷூரா உறுப்பினர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் நன்கு சிந்தித்து கருத்தை நிலைநாட்டி இருப்பார்கள் என்று காலத்தின் கலீஃபா நல்லெண்ணம் கொண்டிருக்கிறார். அதன் அடிப்படையில்தான் மஜ்லிஸே ஷூராவின் கருத்துகள் அப்படியே ஒப்புக் கொள்ளப்படுகின்றன. **ஷூராவின் இந்த தீர்மானத்தை ஒப்புக் கொள்வதில் ஜமாஅத்துக்கு நஷ்டம் உருவாகலாம்** அல்லது **இந்த விஷயம் திருக்குர்ஆனின் போதனைக்கு மாறுபட்டது அல்லது அதிலிருந்து விலகியதாக இருக்கிறது என்று சில**

**விவகாரத்தைப் பற்றி காலத்தின் கலீஃபாவுக்கு குறிப்பிட்ட நுட்பமான ஞானம் இருந்தாலேயேயொழிய மற்றபடி பொதுவாக மஜ்லிஸே ஷூராவின் கருத்து அப்படியே ஒப்புக் கொள்ளப்படுகின்றன.** இது திருக்குர்ஆனின் போதனைக்கு மாறுபட்ட செயலுமல்ல, விலகி நிற்கும் செயலும் அல்ல.

இன்னோரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

وَشَاوِرْهُمْ فِي الْأَمْرِ فَإِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللَّهِ

ஒவ்வொரு முக்கியமான விஷயத்திலும் அவர்களிடம் ஆலோசனை கேட்பீராக. (நபிக்கு இந்தக் கட்டளையாகும்.) எனவே நீர் ஏதாவது தீர்மானம் எடுத்து விட்டால் பிறகு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பீராக. (திருக்குர்ஆன் **3:160**) அதாவது முக்கியமான விஷயங்களில் ஆலோசனை அவசியமாகும். கண்டிப்பாக ஆலோசனை செய்ய வேண்டும். இந்த கட்டளைக்கிணங்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஆலோசனை கேட்டார்கள். இன்னும் கூறுவதாயிருந்தால், **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அதிகமாக தமது தோழர்களிடம் ஆலோசனை கேட்பவர் எவரையும் நான் கண்டதில்லை என ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.''**

(குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி **2** பக்கம் **195, 196**)

இங்கு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டவாறு இன்னொரு விஷயத்தையும் தெளிவுபடுத்துவது அவசியமாகும். ஷூரா அமைப்பு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நடைமுறைப்படியே நிலைநாட்டப்பட்டுள்ளது. அது காலத்தின் கலீஃபாவுக்கு பல விஷயங்களில்

ஆலோசனை கூறலாம். ஆனால் காலத்தின் கலீஃபா தீர்ப்பு கூறுவதில் தனிப்பட்ட அதிகாரம் பெற்றவராகத் திகழ்கின்றார். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

**வரலாற்றில் வருவது என்னவெனில், பத்ர் போர் சந்தர்ப்பத்தில் கைதிகளுடன் நடந்து கொள்வது பற்றி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பெரும்பாலானவர்களின் கருத்தை மறுத்தவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு சில நேரத்தில் மற்ற சில போர்களின் விவகாரத்தில் சஹாபிகளின் ஆலோசனைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். உஹது போரிலும் நபித் தோழர்களின் ஆலோசனையின்படிதான் அவர்கள் அங்கு சென்றார்கள். மற்றபடி அவர்கள் விரும்பவில்லை; மதீனாவில் இருந்து போர் செய்ய வேண்டும் என்றே அவர்கள் விரும்பினார்கள். சஹாபாக்களின் இந்த ஆலோசனைக்குப் பிறகு அவர்கள் ஆயுதங்களை ஏந்தியவாறு வெளியேறியதும் அன்னாரின் விருப்பத்திற்கு மாறாக தீர்மானம் எடுக்கப்பட்டு விட்டதே என சஹாபிகள் கருதினர். அப்போது இங்கிருந்தே எதிர்கொள்வோம் என சஹாபாக்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இல்லை; நபி ஒருமுறை தீர்மானம் எடுத்து விட்டால் பிறகு பின்வாங்குவதில்லை. இப்போது அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வையுங்கள்; முன்னேறிச் செல்லுங்கள் என்று கூறினார்கள்.** பிறகு இன்னொரு நிலையும் ஏற்பட்டது. **ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது அதில் கையொப்பமிட வேண்டாம்**

**என்பது எல்லா சஹாபிகளின் ஒன்றுபட்ட கருத்தாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைவரின் கருத்துக்கும் மாற்றமாக அதில் கையொப்பமிட்டார்கள். பிறகு பாருங்கள். அல்லாஹ் அதற்கு எத்தகைய மகத்தான விளைவுகளை ஏற்படுத்தினான்!**

ஆக, ஒரு விஷயத்தில் முழுமையான தெளிவைப் பெற ஆலோசனை கேட்பதற்கு கட்டளை இருக்கிறது உண்மைதான். ஆனால் ஆலோசனைகளை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும் என்பது கட்டாயமில்லை. **ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நடைமுறையைப் பின்பற்றியே நமது ஷூரா அமைப்பும் நிலைபெற்றிருக்கிறது. ஆழமாக சென்று விஷயங்களை பார்ப்பதற்காக கலீஃபாக்கள் ஆலோசனைகளை பெறுகிறார்கள். ஆனால் ஷூராவின் எல்லா தீர்மானங்களையும் ஒப்புக்கொள்ளவும் வேண்டும் என்பது அவர்களுக்கு கட்டாயமில்லை.** எனவே ஷூராவின் நடவடிக்கையின் இறுதியில் ஆலோசிக்கப்பட்ட விஷயங்கள் தொடர்பாக அறிக்கை எடுத்து வைக்கப்படும்போது ஷூரா இந்த பரிந்துரையை செய்கிறது என எழுதப்படுகிறது. ஷூரா இந்த தீர்மானத்தை எடுக்கிறது என்று எழுதுவதற்கு உரிமை இல்லை. **ஷூராவுக்கு பரிந்துரைப்பதற்கான உரிமை மட்டும் இருக்கிறது; தீர்மானிக்கும் உரிமை காலத்தின் கலீஃபாவுக்கு மட்டுமே உள்ளது.** இதில் சிலருடைய சிந்தனையில் இன்னொரு கேள்வியும் உருவாகலாம். பிறகு ஷூராவை அழைப்பதற்கும் ஆலோசனை பெறுவதற்கும் என்ன அவசியம் இருக்கிறது? இன்றைய படித்த மக்களின்

சிந்தனையில் இதுவும் வந்து விடுகிறது. ஆக, நாம் முன்னர் கூறியது போன்று, மஜ்லிஸே முஷாவரத் ஆலோசனை வழங்கும் ஒரு சபையே ஆகும். அது, தன் அதிகாரத்தால் தீர்மானம் எடுக்கும் பாராளுமன்றம் அல்ல. இறுதி தீர்ப்புக்காக அவ்விஷயம் காலத்தின் கலீஃபாவிடமே வருகிறது. தீர்ப்பு வழங்குவதற்கான அதிகாரம் காலத்தின் கலீஃபாவுக்கே இருக்கிறது. இந்த அதிகாரம் அல்லாஹ்வால் வழங்கப்பட்டதாகும். ஆனால் பொதுவாக ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன - குறிப்பிட்ட நிலைமைகளைத் தவிர. நான் முன்னர் கூறியது போன்று, அது பற்றிய ஞானம் காலத்தின் கலீஃபாவுக்கு இருக்கிறது. சில நேரங்களில் சில காரணங்களினால் அந்த ஆலோசனைகள் மறுக்கப்பட்டிருக்கலாம். அவற்றை காலத்தின் கலீஃபா கூற விரும்பாமலும் இருக்கலாம். அப்படிப்பட்ட சில கட்டாய சூழ்நிலைகளும் உள்ளன. ஆக, நான் எடுத்துரைப்பதன் நோக்கம் எந்நிலையிலும் ஆலோசனை பெறுவதில் பயன் இருக்கிறது. ஏனெனில் பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த, பலவித சமூக சூழலைக் கொண்ட, அதிகமாகவும், குறைவாகவும் படித்த மக்கள் ஆலோசனை வழங்குகிறார்கள். அடுத்தபடியாக, இன்றைய காலத்தில் ஜமாஅத் பரவி விட்டது. பல்வேறு நாடுகளைப் பொருத்தவரை அவரவரது நாட்டின் நிலைமைகளுக்கேற்ப ஆலோசனைகள் வந்து சேர்கின்றன. அப்போது அந்த ஆலோசனைகளின் மூலமாக காலத்தின் கலீஃபாவுக்கு அந்த நாடுகளின் பொதுவான நிலைமைகள், அங்கு ஜமாஅத்தை எவ்வாறு நிலைநிறுத்துவது, ஜமாஅத்தின் மார்க்க, ஆன்மீக தகுதி, அவர்களின் சிந்தனைகள் குறித்த

விபரங்கள் தெரிய வருகின்றன. பிறகு என்ன திட்டம் அல்லது செயல்முறையை உருவாக்க வேண்டுமோ அதில் அவருக்கு உதவி கிடைக்கிறது. சுருக்கமாக, பல நாடுகளில் நடக்கும் ஷூராவின் சில ஆலோசனைகள் அவற்றின் அசல் வடிவத்தில் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் காலத்தின் கலீஃபா பார்ப்பதனாலும் கேட்பதனாலும் எந்நிலையிலும் அவர்களுக்கு பயன் கிடைக்கத்தான் செய்கிறது. ஆலோசனை கொடுக்கக் கூடியவர்கள் எந்நிலையிலும் நல்ல எண்ணத்துடன் ஆலோசனை கொடுப்பது கட்டாயமாகும். காலத்தின் கலீஃபா ஜமாஅத்திலிருந்து ஆலோசனை பெறுவது அவருடைய உரிமையும் கடமையும் ஆகும்.''

(குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி **2** பக்கம் **197 - 199**)

காலத்தின் கலீஃபாவின் கூற்றுகளைக் கேட்காததன் விளைவு தன்னையும் தனது சந்ததிகளையும் இறைவனுடைய அருள்களிலிருந்தும் மார்க்கத்திலிருந்தும் தூர விலக்குவதாகும். இது தொடர்பாக ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''ஜமாஅத்திற்கு மதிப்பளிக்கவில்லை என்றால், காலத்தின் கலீஃபாவின் விஷயங்களுக்கு செவிகொடுக்கவில்லை என்றால் நீங்கள் படிப்படியாக உங்களை அல்லாஹ்வின் அருளிலிருந்து விலக்குவது மட்டுமின்றி உங்கள் சந்ததிகளையும் மார்க்கத்திலிருந்து தூர விலக்குபவர்களாகி விடுவீர்கள். எனவே இந்த உலகம் உங்களை மார்க்கத்தை விட்டும் தூர விலக்கிக் கொண்டிருக்கிறதென்றால் அது இறையருள் அல்ல;

அழிவின் நிலையாகும் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். இது அல்லாஹ்வின் அருட்கொடைகளை மறுப்பதாகும். இது அல்லாஹ்வின் அருட்கொடைகளை மதிக்காததாகும். நாம் இக்காலத்தின் இமாமிடம் பைஅத் செய்திருக்கின்றோம் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர் வருகையை எல்லா சமுதாயமும் எதிர்பார்த்திருந்தது. அவரைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் அன்பான சொற்களை பயன்படுத்தியுள்ளார்கள். அவருக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சலாத்தை எட்ட வைத்திருக்கிறார்கள். (அல்முஃஜமுல் அவ்ஸத். தொகுதி **3** ஹதீஸ் எண்: **4898** பக்கம் **383 - 384.** தாருல் ஃபிக்ர், உமான் உர்தன் முதல் வெளியீடு **1999**) அப்படிப்பட்டவரைச் சேர்ந்தவராக இருப்பது சாதாரணமான விஷயமா என்ன? நிச்சயமாக இது ஓர் அஹ்மதிக்கு கிடைத்த மிகப் பெரும் கண்ணியமாகும். எனவே இந்த கண்ணியத்திற்கு மதிப்பளிப்பது ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். இவ்வாறு மதிப்பளிப்பது பின்னர் உண்மையான ஓர் அஹ்மதியை நன்றி செலுத்தும் அடியாராக ஆக்கும். பிறகு அவர் அல்லாஹ்வின் அருட்கள் முன்னரை விட அதிகமாக இறங்குவதைக் காண்பார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் தொடர்பு கொண்டவர்களாக இருத்தல் என்பது வெறும் நாவளவிலான அறிவிப்பு அல்ல. மாறாக, நாம் அன்னாருடன் செய்த பைஅத் உடன்படிக்கை ஆகும். அன்னாருக்குப் பிறகு அன்னாரின் பெயரில் காலத்தின்

கலீஃபாவிடம் அந்த உடன்படிக்கையை செய்துள்ளோம். இந்த பைஅத்தின் கருத்தை அறிந்து கொள்ளும் தேவையும் ஒவ்வோர் அஹ்மதிக்கும் இருக்கிறது. பைஅத் என்பது தம்மை விற்று விடுவதற்குப் பெயராகும். அதாவது தனது ஆசைகள், எல்லா விதமான விருப்பங்கள், உணர்வுகள் ஆகியவற்றை இறை கட்டளைக்காக தியாகம் செய்வதும் அவற்றிற்கேற்ப தமது வாழ்வைக் கழிப்பதற்குமான ஓர் உடன்படிக்கையாகும். இறைவனை முன்னிறுத்தி தனது எல்லா திருப்திகளையும் முற்றிலும் முடிவுக்குக் கொண்டு வருவதற்குப் பெயராகும். இறைவனை சந்திக்கின்ற நாளைப் பற்றியும், எந்த நாளில் ஒவ்வோர் உடன்படிக்கையைப் பற்றியும் கேள்வி கேட்கப்படுமோ அந்த நாளைப் பற்றியும் உறுதியான நம்பிக்கை இருக்குமென்றால் மனிதன் நடுங்கி விடுகிறான்.''

(குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி **6** பக்கம் **191 - 192**)

கிலாஃபத்துடன் தொடர்பு வைப்பது பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்:

''எனவே நீங்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால், உலகத்தில் மேலோங்குதல் அடைய வேண்டுமென்றால் உங்களுக்கு எனது அறிவுரை என்னவெனில் - எனது தூது என்னவெனில், நீங்கள் கிலாஃபத்துடன் தொடர்புள்ளவர்களாக ஆகுங்கள். அல்லாஹ்வின் இந்தக் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நமது அனைத்து முன்னேற்றங்களின் அடித்தளம் கிலாஃபத்தோடு நமது தொடர்பைச் சார்ந்தேயுள்ளது.''

(அல்ஃபஸ்ல் நாளிதழ் ரப்வா **30.5.2003**)

''அல்லாஹ் உங்களுக்கு கிலாஃபத்தின் அருட்கொடையை வழங்கியிருக்கிறான். இது எல்லாவிதமான முன்னேற்றங்களையும் பெற்றுத்தரும் ஓர் அருளுக்குரிய வழியாகும். அல்லாஹ்வின் இந்தக் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுவதற்காக வெற்றிகளைப் பெறுவதற்காக கிலாஃபத்துடன் எப்போதும் தொடர்பு கொண்டிருங்கள். இந்த மகத்தான அருட்கொடையுடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்குமாறு தலைமுறை தலைமுறையாக உங்கள் சந்ததிகளுக்கும் அறிவுறுத்திக் கொண்டிருங்கள். அதன் உயர்வுக்காகவும் உறுதிக்காகவும் எப்போதும் முயற்சி செய்யுங்கள். இதன் வழியில் எல்லா தியாகங்களையும் செய்ய ஆயத்தமாக இருங்கள்.''

(மஷ்அலே ராஹ். தொகுதி **5** பக்கம் **32 - 33**)

''இக்காலத்தில் அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டவர்களாக இருப்பதன் விளைவாகவே ஈமான் அளவிலான, செயல் அளவிலான முன்னேற்றம் கிடைக்கும். ஒருவர் எவ்வளவு பெரிய அறிஞராக இருந்தாலும் அல்லது திறமைசாலியாக இருந்தாலும் அல்லது வெளிப்படையில் ஏதேனும் ஆன்மீக பதவியை பெற்றவராக கருதப்பட்டாலும் காலத்தின் கலீஃபாவுடன் உள்ள தொடர்பின் நிலை, போதுமான அளவுக்கு இல்லையென்றால் ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் அல்லது ஒருவருடைய ஆன்மீக முன்னேற்றத்தில் அவருடைய இந்த

தகுதிகள் அணுவளவும் தாக்கத்தை உருவாக்காது. அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இந்த விஷயத்தை அதன் ஆழம் வரை சென்று புரிவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.''

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹ் அவர்கள் பாகிஸ்தானில் **2014** - ல் நடைபெற்ற மஜ்லிஸே ஷூராவிற்கு அனுப்பிய தூது. அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல் **23 - 29** மே **2014** பக்கம் **1**)

''அவ்வாறே ஒவ்வோர் அஹ்மதிக்கும் உள்ள பொறுப்பு என்னவெனில், அவர் தம்மைத் தாமே அஹ்மதிய்யத்துடன் தொடர்புடையவராகக் கருதும்போது அவர் எப்போதும் ஜமாஅத் அமைப்புடன் உறுதியான தொடர்பை வைக்க வேண்டும். மேலும் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் நன்றியுணர்வுடனும், கட்டுப்படுதலுடனும் கூடிய தொடர்பை நிலைத்திருக்கச் செய்வது அவர் மீது கடமையாகும். ஏனெனில் பைஅத் செய்யும்போது அவர் இந்த உடன்படிக்கையைத்தான் செய்திருக்கிறார். அல்லாஹ்வின் அருளால் புதிதாக ஜமாஅத்தில் இணைபவர்களில் யாரெல்லாம் முழு உறுதியுடனும் அகப்பார்வையுடனும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் தம் பைஅத்தின் போது செய்த உடன்படிக்கை, அதன் நிபந்தனைகள் குறித்து சிந்தித்துக் கொண்டும் இருக்கிறார்கள். பலர் எனக்கு கடிதங்கள் எழுதிக் கொண்டும் இருக்கிறார்கள்........''

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் **30,** அக்டோபர் - நவம்பர் **2015** பக்கம் **6**)

‘‘நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து, எந்த ஜமாஅத்திற்கு கிலாஃபத்திற்கான வாக்குறுதி இருக்கின்றதோ அந்த நம்பிக்கை கொண்ட ஜமாஅத்தில் இணைந்து விட்டேன் என்று வாதிக்கும் ஒவ்வோர் அஹ்மதியும் அல்லாஹ்வின் இந்த கட்டளைக்கேற்ப எப்போதும் தமது செயல்பாடுகளில் தூய மாறுதல்களை உருவாக்கிக் கொண்டே செல்ல வேண்டியது அவரது கடமையாகும். அல்லாஹ் நமக்கு கிலாஃபத்தின் அருளை வழங்கியிருக்கிறான்; நாம் அதற்கு தகுதி வாய்ந்தவர்களாக ஆவதற்கு முடிந்த அளவுக்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களிடம் செய்திருக்கும் வாக்குறுதியின் அருட்கொடைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதில்தான் கிலாஃபத்தின் அருள் இறக்கப்பட்டிருக்கிறது என்ற சிந்தனை ஒவ்வோர் ஆணுக்கும், பெண்ணுக்கும், வாலிபருக்கும், குழந்தைக்கும் ஏற்பட வேண்டும். எந்த நற்செயல்களை செய்வதற்கு இறைவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிறானோ அந்த நற்செயல்களை நிறைவேற்றுவதை நாம் நமது வாழ்வின் அங்கமாக ஆக்க வேண்டும். இன்று நாம் நமது நிலைமைகளை மாற்றுவதன் பக்கமும், நிரந்தர தன்மையுடன் அதன்படி செயல்படுவதன் பக்கமும் கவனம் செலுத்தாவிட்டால் கொஞ்சம் கொஞ்சமாக விலகி வெகுதூரத்திற்கு சென்று விடுவோம். பிறகு அங்கிருந்து திரும்பி வருவது முடியாத காரியமாக ஆகிவிடும். அதன் விளைவாக கிலாஃபத்துடன் தொடர்புடைய அருட்களுக்கு நாம் உரிமை பெற்றவர்களாகவும் ஆக முடியாது. நாம் இழப்பிற்குரியவர்களாக ஆகிவிடுவது மட்டுமின்றி நமது தலைமுறையினரையும் இழப்பிற்குரியோராக ஆக்கிக்

கொண்டிருப்போம்........இன்று நாம் இந்த பொறுப்பை நிறைவேற்றியவாறு இந்த அருளை பாதுகாத்து நமது சந்ததிகளிடம் இதன் முக்கியத்துவத்தை நிலைநாட்ட வேண்டியது நமது கடமையாகும். என்ன ஆனாலும் சரி, நாம் நமது உயிரை, செல்வத்தை, நேரத்தை, ஆன்மாவை தியாகம் செய்தவாறு அஹ்மதிய்யா கிலாஃபத்தை பாதுகாக்க வேண்டும்; நமது வழித்தோன்றல்கள், நமது சமுதாயம் மற்றும் அகில உலகிலும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதை எட்ட வைப்பதற்கு முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும் என நமது சந்ததிகளிடம் நாம் உறுதிமொழி வாங்க வேண்டும்......''
(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் **24 - 30** மே **2013** பக்கம் **8**)

''துஆக்களில் அதிக அக்கறை செலுத்துவதும் உங்களை கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக வைப்பதும் உங்களில் ஒவ்வொருவரின் கடமையாகும். எல்லா முன்னேற்றங்களின், வெற்றிகளின் இரகசியம் கிலாஃபத்துடன் தொடர்பு கொள்வதிலேயே இருக்கிறது என்ற நுட்பமான கருத்தை எப்போதும் நினைவில் வையுங்கள். தன்னை இமாமுடன் தொடர்பு கொண்டவராக ஆக்குபவரே இயக்கத்தின் பயனுள்ளவராக இருக்க முடியும். ஒருவர் தன்னை இமாமுடன் தொடர்பு கொண்டவராக ஆக்காவிட்டால் அவர் உலக அளவிலான ஞானத்தைக் கொண்டவராக இருந்தாலும் அதனால் அவருக்கு எவ்வித பலனும் இல்லை. உங்கள் அறிவுகள், திட்டங்கள் கிலாஃபத்தின் கீழ் இருக்கும் வரை நீங்கள் உங்கள் இமாமின் பின்னால் அவரது சைகையின்படி சென்று கொண்டிருக்கும் வரை அல்லாஹ்வின் உதவியும் ஒத்தாசையும் உங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும்.''

(அல்ஃபஸ்ல் நாளிதழ் **30** மே **2003** பக்கம் **2**)

கிலாஃபத்துக்கு ஒத்துழைப்பு கொடுப்பது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சான்றை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''ஒரு குத்பாவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக முரப்பிகள், ஆலிம்கள் ஆகியோருக்கு ஒரு முக்கியமான பெரிய அறிவுரையை வழங்கினார்கள். மார்க்கத்தைப் பற்றிய வேதனை கொண்ட, இயக்கத்துடன் தூய பற்று கொண்ட, இறைவனின் இயக்கம் நல்ல பெயருடன் உலகில் நிலைத்து நிற்க வேண்டும் என விரும்புகின்றவர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்த அதே கண்ணியம் மீண்டும் கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்களும், அப்பணிக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த முயற்சிகள் வீண் போய் விடக் கூடாது என விரும்புகின்றவர்களும், கலீஃபாவுடன் இரவு பகலாக ஒத்துழைப்பு நல்கி, உளமாற ஜமாஅத்திற்கு மறுமலர்ச்சி கிட்டும் பணிகளில் ஈடுபடுவது அவர்களது கடமையாகும். அப்படிப்பட்டவர்கள் திருமணத்தின்போது தமது மடிகளை அதில் பேரித்தம் பழங்கள் விழ வேண்டும் என்பதற்காக விரிப்பது போன்று கலீஃபா ஜமாஅத்தின் சீர்திருத்தத்திற்காக எதையாவது கூறினால் அதை பெற வேண்டும். (சில இடங்களில் திருமணத்தின் போது பேரித்தம் பழங்களை விநியோகிக்கக்கூடிய சம்பிரதாயம் காணப்படுகிறது. அதை வாங்குவதற்காக மக்கள் மடிகளை விரிப்பார்கள்.) மேலும் இக்கடமை குறித்து ஜமாஅத் உறுப்பினர்களுக்கு முன்னால்

எடுத்துக் கூற வேண்டும். குறைமதி கொண்ட மனிதனும் கூட புரிந்து கொள்ளும் வண்ணம், மார்க்க கோட்பாடுகளை பொருத்தமான முறையில் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூற வேண்டும்.''

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி **18** பக்கம் **214 - 215** அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் **19 - 25** ஜூன் **2015** பக்கம் **8**)

''இது கிலாஃபத்தின் அருளாகும். இது ஜமாஅத்தின் உயிராகும். எனவே வாழ்வை விரும்புகிறீர்கள் என்றால் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் கலப்பற்றதன்மையுடனும், நன்றியுணர்வுடனும், முழுமையாக இணைந்து விடுங்கள். உங்களின் எல்லா முன்னேற்றங்களின் இரகசியமும் கிலாஃபத்துடன் தொடர்பு கொள்வதுடன்தான் உள்ளது. காலத்தின் கலீஃபாவின் திருப்தி உங்களின் திருப்தியாக ஆகிவிட வேண்டும். காலத்தின் கலீஃபாவின் பாதங்களைத் தொடர்ந்து உங்கள் பாதங்கள் செல்ல வேண்டும். காலத்தின் கலீஃபாவின் திருப்தி உங்களின் நோக்கமாக இருக்க வேண்டும்.'' (காலிது மாத இதழ். சய்யிதுனா தாஹிர் சிறப்பிதழ் மார்ச் ஏப்ரல் **2004** பக்கம் **4**)

**''கிலாஃபத்தின் அருள் உங்களிடம் எப்போதும் நிலைபெறவும், கிலாஃபத்தின் உறுதிப்பாட்டிற்கும் ஒவ்வோரு அஹ்மதியும் தொடர்ந்து துஆவுடன் முயற்சி செய்ய வேண்டும்**........உங்களிடம் சிறப்பான மாற்றத்தை உருவாக்குங்கள். முன்னரை விட அதிகமாக ஈமானிலும் கலப்பற்றதன்மையிலும் முன்னேறுங்கள்.......நல்ல செயல்களை செய்பவர்களும் கிலாஃபத்துடன் ஒன்றிணைந்து

இருப்பவரும்தான் இப்போது அஹ்மதிய்யத்தின் கொடியை கையில் ஏந்துபவராவார்.'' (ஜுமுஆ குத்பா 27 மே 2005)

''இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் உறுதிப்பாட்டிற்காகவும், இஸ்லாத்தைப் பரப்புவதற்காகவும், கிலாஃபத் அமைப்புக்காகவும் இறுதி மூச்சு வரை முயற்சி செய்ய வேண்டும். அதற்காக பெரும் பெரும் தியாகங்களை செய்வதற்கு எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். மேலும் உங்கள் பிள்ளைகளை எப்போதும் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டிருக்குமாறு அறிவுரை கூறிக் கொண்டிருக்க வேண்டும். அவர்களின் உள்ளத்தில் காலத்தின் கலீஃபாவுடன் அன்பை உருவாக்க வேண்டும். இது எத்தகைய பெரிய மகத்தான குறிக்கோள் என்றால் இந்த உடன்படிக்கையின்படி முழுமையாக செயல்படுவதற்கும் அதன் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கும் ஓர் உறுதியான எண்ணமும், பித்து பிடித்த நிலையும்தான் தேவைப்படுகிறது.''
(அந்நாஸிர் மாத இதழ் ஜெர்மனி. ஜூன் முதல் செப்டம்பர் வரை 2003 பக்கம் 1)

''அவன் உண்மையான வாக்குறுதிகளை வழங்கும் இறைவனாவான். **அவன் இன்றும் தனது அன்பிற்குரிய மஸீஹ் (அலை) அவர்களின் இந்த அன்பான ஜமாஅத்தின் மீது தன் அருளின் கையை வைத்துள்ளான். அவன் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டான்; ஒருபோதும் கைவிட மாட்டான்; ஒருபோதும் கைவிட மாட்டான்;** அவன் முந்தைய கிலாஃபத்துகளில் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றியது போன்று இன்றும் அவன் தனது மஸீஹிடம் செய்த வாக்குறுதியை

நிறைவேற்றிக் கொண்டே இருப்பான். இதற்கு முன்பு அவன் தனது கருணையையும் அருளையும் வழங்கி வந்ததைப் போன்றே இன்றும் வழங்கிக் கொண்டிருப்பான் - இன்ஷா அல்லாஹ்.........எனவே அவன் பக்கம் குனிந்து, அருளை வேண்டி, அவனது சன்னிதியில் துஆ செய்து வீழ்ந்திருங்கள். இந்த உறுதியான கைப்பிடியைப் பிடித்துக் கொண்டிருங்கள். பிறகு எவரும் உங்களை அசைக்க முடியாது. அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.''

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டல் **21** மே **2004**)

காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு கூற்றையும் கவனமாகக் கேட்பது ஒவ்வோர் அஹ்மதியின் அடிப்படை கடமையாகும். ஏனெனில் இந்தக் குரல் ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் நிலையை மாற்றி விடுகிறது. அதில் அல்லாஹ்வின் ஆதரவுகள் மற்றும் அருள்கள் அடங்கி இருக்கின்றன. ஏனெனில் **காலத்தின் கலீஃபா அல்லாஹ்வின் சிறப்பான அனுமதியுடன் பேசுகின்றார். இறைஞானங்கள் அவருடைய நாவினால் வெளியிடப்படுகின்றன. உலகம் அவற்றிலிருந்து விலகியிருக்கின்றது. அவை தேடினாலும் கிடைக்காது.** அவர் குறித்த நேரத்தில் இறைவனின் நாட்டத்திற்கேற்ப நம்பிக்கை கொண்டவர்களை செயல்பட அழைக்கின்றார். தகுதிக்கேற்ப செயல் வடிவம் பெறும் அந்த அச்சை ஒரு கலீஃபாவால்தான் உருவாக்க முடியும். பிறகு அதில் சீர்திருத்தத்துடன் கூடிய செயல் அமைந்து விடும். எல்லா

நேரமும் கலீஃபாவின் வழிகாட்டல்களின் மூலமாகவே முன்னேற்றத்தின் வழிகளை சரியான முறையில் கடந்து செல்ல முடியும்.

எனவே காலத்தின் கலீஃபாவின் ஞானம் மிக்க குத்பாக்களை, சொற்பொழிவுகளை, வகுப்புகளை, தூதுச் செய்திகளை தொடர்ந்து கவனமாகக் கேட்பதும், குழந்தைகளுக்கு கேட்க வைப்பதும், மனைவி மக்களுக்கு கேட்க வைப்பதும், மற்ற நண்பர்கள், உறவினர்களுக்கு, அக்கம்பக்கத்திலுள்ள சகோதரர்களுக்கு எடுத்துக் கூறுவதும் ஒவ்வோர் அஹ்மதி ஆண் பெண்ணுக்கு கடமையாகும். அதன் மூலமாகத்தான் காலத்தின் கலீஃபா அவர்கள் என்ன கூறுகிறார்கள்? நம்மிடம் என்ன விரும்புகிறார்கள்? நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள்? ஆகிய விஷயங்கள் தெரிய வரும். எவர் இந்த வழிகாட்டல்களை ஒழுங்காக கேட்க மாட்டாரோ அவர் முழுமையான முறையில் கட்டுப்படும் நற்பேற்றிலிருந்து இழப்பிற்குரியவராக இருக்கிறார். அது அவரை ஈருலகிலும் ஈடு செய்ய முடியாத நஷ்டத்தை சென்றடைய வைத்து விடும்!!

கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதுதான் ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் உயர்தகுதிக்கு உகந்ததாகும். கிலாஃபத்தின் மீது நன்றியுணர்வையும், நெருங்கிய உறவையும் அவரது ஒவ்வொரு செயலும் வெளிப்படுத்த வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

‘‘அல்லாஹ்வின் கை ஜமாஅத்தின் மீது இருக்கிறது என்பதன் இரகசியம் இதுவேயாகும். அல்லாஹ் ஏகத்துவத்தை விரும்புகின்றான். கட்டுப்படாதவரை

ஏகத்துவம் நிலைபெற முடியாது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் கருத்து கூறும் திறமை பெற்றவர்களாக நபித்தோழர்கள் இருந்தனர். அவர்கள் அரசியல் சட்டங்களையும் நன்கு அறியும் வகையில் இறைவன் அவர்களை உருவாக்கி இருந்தான். ஏனெனில் பிற்காலத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்ற நபித்தோழர்கள் கலீஃபாவானபோது, அவர்களிடம் ஆட்சி வந்தபோது அவர்கள் எந்த அளவுக்கு சிறப்பான முறையில் ஆட்சியின் பொறுப்பை நிறைவேற்றினார்கள் என்றால் அதிலிருந்து அவர்களிடம் கருத்து கூறும் தகுதி எந்த அளவுக்கு இருந்தது என்பது நன்றாகத் தெரிகிறது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னால் நபித்தோழர்களின் நிலை எப்படி இருந்ததென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கருத்தைக் கூறினால் அதற்கு முன்னால் தமது அனைத்து கருத்துகளையும், ஞானங்களையும் அற்பமாகக் கருதினர். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதையே செயல்படத் தகுந்தது எனக் குறிப்பிட்டனர்.............இஸ்லாம் வாளின் பலவந்தத்தால் பரவியது என்று அறியாத எதிரிகள் கூறுகின்றனர். ஆனால் நான் கூறுகிறேன். இது சரியானதல்ல. உண்மை என்னவெனில், உள்ளங்கள் எனும் குழாய்கள் கட்டுப்படுதல் எனும் தண்ணீரினால் நிறைந்து வழிந்தோடின. அந்த கட்டுப்படுதலின் ஒற்றுமையின் விளைவு, அவர்கள் மற்றவர்களின் உள்ளங்களையும் கட்டுப்பட வைத்தனர்...............வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத் என அழைக்கப்பட்டு

சஹாபாக்களின் ஜமாஅத்துடன் இணைய விரும்பும் நீங்கள் உங்களிடம் சஹாபாக்களின் பண்பை உருவாக்குங்கள். கட்டுப்படுதல் இருக்கிறதென்றால் அதன் தரம் அவ்வாறு இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்பு சகோதரத்துவம் இருக்கிறதென்றால் அவ்வாறு இருக்க வேண்டும். சுருக்கமாக, எல்லா நிலையிலும் சஹாபாக்களின் பண்பை மேற்கொள்ளுங்கள்.''

(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ் ஸலாம் அவர்களின் விளக்கவுரை தொகுதி **2** பக்கம் **246 - 248** சூரா நிஸா வசனம் **60**)

எனவே நாம் கிலாஃபத்திற்கு உரிய முறையில் மதிப்பளிக்கக் கூடியவர்களாக இருக்க அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக. நாம் நமது உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும். இந்த அருள் தலைமுறை தலைமுறையாக நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் வகையில் வாழ்வின் இறுதி மூச்சு வரை நன்றியுணர்வுடன் கிலாஃபத்துடன் பிணைந்திருப்போமாக. ஆமீன். கிலாஃபத்தின் விஷயங்களை நாம் கேட்பவர்களாக மட்டும் இருக்காமல் அதன்படி செயல்படக் கூடியவர்களாக இருக்கும் நல்வாய்ப்பையும் அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப நாம் கிலாஃபத்தின் அருளை பாதுகாப்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

# கிலாஃபத்தின் அருள்

(உருது கவிதையின் பொருள்)

எந்த இறைவன் (கிலாஃபத் எனும்) இந்த மாபெரும் அருளை நம் மீது இறக்கினானோ அவனது மிகப் பெரும் அருட்கொடை நம் மீது இருக்கிறது.

கடினம் ஏற்பட்டு விடக் கூடாதே என அவநம்பிக்கை கொண்டு விடக் கூடாது. கிலாஃபத்தின் அருள் தொடர்ந்து கொண்டிருக்கும்.

நுபுவ்வத்தின் கைகளால் நடப்பட்ட செடி கிலாஃபத்தின் நிழலின் கீழ் மலந்தது; கனிந்தது.

இது அந்தத் தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சுகிறது. கிலாஃபத்தின் அருள் தொடரும்.

கிலாஃபத்துடன் எவர் மோதினாலும் அவர் இழிவின் படுகுழியில் வீழ்வார்.

இறைவனின் இந்த நடைமுறை ஆரம்பத்திலிருந்தே தொடர்கிறது. கிலாஃபத்தின் அருள் தொடரும்.

கிலாஃபத் நிலைத்திருக்கும் என்ற இறைவனின் வாக்குறுதி இருக்கிறது.

இந்த அருட்கொடை உங்களுக்கு மறுமை வரை கிடைக்கும்.

ஆனால் அதற்கு கட்டுப்படுவது நிபந்தனையாகும். கிலாஃபத்தின் அருள் எப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கும்.

அன்பின் உணர்வு, நன்றியுணர்வு, சகோதரத்துவம் எனும் அருள், முன்னேற்றத்தின் ஏணிப்படி ஆகிய இந்த எல்லா அருள்களும் கிலாஃபத்தின் மூலமாகவே

தொடர்கின்றன. கிலாஃபத்தின் அருள் எப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கும்.

இறைவா! நீ எங்களுக்கு நல்லறிவினை வழங்குவாயாக. கிலாஃபத்துடன் ஆழமான அன்பை வழங்குவாயாக.

எங்களின் எந்த தடுமாற்றமும் எங்களுக்கு துக்கத்தைக் கொடுக்க வேண்டாம்.

கிலாஃபத்தின் அருள் எப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கும்.

*(இயற்றியவர்: சாஹிப்ஸாதீ அமத்துல் குத்தூஸ் பேகம் சாஹிபா)*